விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

வலம்புரி

VALAMPURI

திருமணப் பட்டுப், புடைவைகளின் கைராசியான ஸ்தாபனம்

ரவி அன் ராஜ் சில்க்ஸ்



77, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்

T.P:- 021-2469

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆடி 02 | புதன்கிழமை (17.07.2002) | தொலைபேசி 3378 | ஒலி 210

## ஓகஸ்ட் 2க்கு முன் பொது இடங்களில் இருந்து

# படையினர் முழுமையாக வெளியேறுவர்

### தம்மைச் சந்தித்த கூட்டமைப்பிடம் பிரதமர் உறுதி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் அரச தரப்புக் காட்டி வரும் அசமந்தம், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் உள்ள தாமதங்கள் குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஓகஸ்ட் 2ந் திகதிக்கு முன்பாக வடக்குக் கிழக்கில் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து படையினர் முற்றாக வெளியேறுவர் என பிரதமர் உறுதியளித்துள்ளார். இதே வேளை குடாநாட்டில் படையினர் புதிதுபுதிதாக பாதுகாப்பு அரண்களை அமைப்பதிலும், குடாநாட்டின் சொத்தான பனை மரங்களை படையினர் பாதுகாப்புக் காராணங்களைக் காட்டி வகை தொகையின்றித் தறித்து வீழ்த்துவது தொடர்பாகவும் கூட்டமைப்பினர் பிரதமரிடம் எடுத்துக் கூறினர்.

அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் வாடும்

(10ம் பக்கம் பார்க்க)

## விமானப்படைக்கு புதிய தளபதி

(கொழும்பு)

- இலங்கை விமானப்படையின் 11 வது தளபதியாக ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா நேற்று முதல் நியமனம் பெற்றுள்ளார்.

விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி பதவி விலகிச்செல்வதை அடுத்து புதிய தளபதியாக இவர் நியமனம் பெற்றுள்ளார்.

புதிய விமானப்படைத் தளபதியாகப் பதவியேற்றுள்ள டொனால்ட் பெரேரா 1987ம் ஆண்டு வடமராட்சியில் நடைபெற்ற ஒப்பரேஷன்

(10ம் பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வன் - ஹெவ்டே நேற்று வன்னியில் சந்திப்பு

# கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை

# பாதுகாக்கவே படகில் ஏற்றினோம்!

## விடுதலைப்புலிகள் அறிக்கை

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படை அணி தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடற்பரப்பில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறாத வகையில் தமது வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடும்.**

**சிறிலங்கா கடற்படையினர் தமது அத்துமீறல்களை நிறுத்தி விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் மோதலை தவிர்க்க கண்காணிப்புக்குழு உதவும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.**

**கண்காணிப்புக்குழு அங்கத்தவர்களின் பாதுகாப்புக் கருதியே அவர்களை கடற் புலிகள் தமது படகில் அழைத்து வந்தனர்.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரவிக்கப்பட்டுள்ளது.

மன்னாருக்கு அப்பால் உள்ள [illegible] இடம்பெற்ற சம்பவம் தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று நேற்றுக் காலை 10மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாள

## புலிகளின் குற்றச்சாட்டுக்கு கடற்படைத் தளபதி மறுப்பு

(கொழும்பு)

கடந்த 13ம் திகதி இடம் பெற்ற சம்பவத்தை அடுத்து கடற்படையினர் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறியுள்ளனர் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிதத குற்றச்சாட்டை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்த கிரி வன்மையாக மறுத்துள்ளார்.

கடந்த 13ம் திகதி இரணைதீவுக்கடலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகக் கடற்படைத் தளபதி தனியார்

(10ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் யாழ்.வருவார்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் நே

மன்னாருக்கு அப்பால் உள்ள இரணைதீவுக் கடற்பிரதேசத்தில்

தில் நடைபெற்றது.

சுமார் 9மணி நேரம் நடைபெற்ற

ளின் அரசியல் துறைப்பொறுப்பாளர

(10ம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ எதிர்வரும் 20ந் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நடத்திய பேச்சுக்களின் போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொள்வது குறித்து

(10ம் பக்கம் பார்க்க)

### மாணவர்கள்-ஆசிரியர்கள்-பொதுமக்கள் திரண்டு

# தீவகத்தில் நேற்று மும்முனை வீதி மறிப்புப் போராட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையை செம்மையாக நிறைவேற்றக்கோரியும் பொதுமக்களின் குடியிருப்புக்கள், மற்றும் நிலங்களிலிருந்து படையினரை வெளியேற்றக்கோரியும் வேலணையில் திறக்கப்பட்ட பாதையை மூடியதைக் கண்டித்தும் நேற்று பெருமெடுப்பில் மும்முனை வீதி மறிப்பு போராட்டம் வெற்றிகரமாக இடம்பெற்றது.

தீவக வெகுஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராட்டம் காலை 7மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்றது.

சரவணைச்சந்தி, வேலணை வங்களாவடிச் சந்தி, கொம்பனியடிச்

(10ம் பக்கம் பார்க்க)

# எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

(கொழும்பு)

கட்சியாப்பிற்கு இணங்க எனக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று பொதுஜன ஐக்கியமுன்னணியின் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச். எம்.பௌஸி தெரிவித்துள்ளார்.

இவரால் முன்னர் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள் சம்பந்தமாக ஜனாதிபதியால் விளக்கம் கோரப்பட்டதை அடுத்து இதற்கு பதிலளிக்கும் வகையில் பௌஸி இதனைத்

(10ம் பக்கம் பார்க்க)


ஹற்றன் நஷனல்

சுபாசிறி

சொந்த தேவைகளுக்கான கடன் திட்டம்

உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்

இதோ! உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன் பற்றிய விபரங்கள்

* ரூ. 25,000/- முதல் ரூ 400,000/- வரை கடன் வசதி பெறலாம்
* மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
* கவர்ச்சிகரமான வட்டி வீதம்
* எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை

இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,

தொலை பேசி :- 021 - 2787, 021 - 3463

தொலை நகல் :- 021 - 3194,

[C/4634]


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

**வாணி சோதிடம்**

நீண்டகால அனுபவமிக்க சோதிடர். உங்கள் கல்வி தொழில் காதல், வெளியூர் பயணம், சிலவைத்தியத்தில் புலப்படா வினையநோய்கள் மனையில் குறைபாடுகள் தெரிந்து கொள்ளவும் நாடுங்கள். எம்மிடம் திருமணத்திற்கு சகல இன, மதத்திலும் உள்நாட்டு வெளிநாட்டுஆண் பெண் குறிப்புக்கள் உண்டு. நேரில்தொடர்புகொள்ளவும் பணியாற்றும்இடம் இல 14 யாழ்பாடிவீதி காலை9-00-மாலை2-00வரை பெருமாள் ஆலயமுன், முகவரி வாணி சோதிடர் சி.கணேசன் 22/1 கச்சேரிவீதி நல்லூர்.
(5692)

**தவறிவிட்டன**

ஆனந்தன் சுகந்தவிநாயகன் என்பவரது தேசியஅ.அட்டையும் விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன தே.அ.அ.இலக்கம் 740132946V விசேட அடையாளஅட்டை விலாசம் 47/1 கலைமகள்வீதி அரியாலைமேற்கு யாழ்ப்பாணம். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (கி-4658)


## செல்போன் மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைக்கைதிகளிடம்இருந்து14செல்போன்களும் 32ஆயிரம்ரூபா பணமும் சிறைச்சாலை அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளது.
(வ)

# தலைவர் பிரபாவின் நம்பிக்கைக்குரிய மதிநுட்பகெரில்லா தளபதி லெப். சீலன்

## நினைவுரையில் தளபதி பால்ராஜ் தெரிவிப்பு

தளபதி லெப் சீலன் (லூக்காஸ் சாள்ஸ்அன்ரனி) எமது இயக்கத்தின் மூத்தஉறுப்பினரும் தலைசிறந்த ஒருகெரில்லாபோராட்ட வீரரும் தமிழீழமக்களின் சுதந்திர எழுச்சிப்போராட்டத்தில்அன்றையகாலகட்டத்தில் முதன்மைத் திறன்களைப்புரிந்து இன்றைய எமதுஇயக்கத்தின் பரிணாமவளர்ச்சிக்கு வித்திட்ட அந்தவீரத்தளபதியின் 19ம்ஆண்டு நினைவைநாம் இங்கு நினைவு கூருகின்ற நிகழ்வில் கலந்துகொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் சாள்ஸ்அன்ரனி சிறப்பு படையணியின்தளபதிகேணல் பால்ராஜ் தெரிவித்துள்ளார்

கடந்த15ந்திகதி தளபதி லெப் சீலனின் 19வதுஆண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பால்ராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்.

இந்தமுதன்மைவீரன்தனது பள்ளிப் பராயத்திலேயே சிங்களஇனவாத அரசின் ஒடுக்குமுறையை எதிர்க்கும் வகையில் திருமலைஇந்துக்கல்லூரியில் சிறிலங்காவின் தேசியக்கொடி ஏற்றப்படும்போது தனக்கேஉரித்தான மதிநுட்பத்தைப்பயன்படுத்தி அந்தக்கொடியை எரித்தது தொடக்கம் எமதுஇயக்கத்தின் மூத்தஉறுப்பினர்களில் ஒருவராகவும் எமதுஇயக்கத்தின் முதல்தாக்குதல் தளபதியாகவும் எமதுதலைவரின் அதிகூடிய நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கியவர்,

தமிழனின் போராட்டவரலாற்றில் முதன்முதலில் இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல்நடத்தி இரண்டு சிறிலங்கா இராணுவத்தினரைக் கொன்றதுடன் முதன்முதலில்எதிரியிடம் இருந்துஆயுதத்தை எமது இயக்கத்திற்குபெற்றுத் தந்தவராகவும் எமது இயக்கத்திற்கு பலவடிவங்களான கெரில்லா போர்உத்திகளை அறிமுகப்படுத்திதுடன்தாமே தலைமை ஏற்று 1982ம் ஆண்டுயாழ் பொன்னாலைப் பாலத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் , சாவகச்சேரிபொலிஸ்நிலையம் மீதான தாக்குதல், கந்தர்மடத்தில்இராணுவத்தினர் மீதான தாக்குதல் தேசத்துரோகிகள் மீதான தாக்குதல், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வெடிபொருட்கள் மீட்புத் தாக்குதல் போன்றவற்றை முன்நின்று செய்து முடித்தவர்.

அன்றைய அந்த குறுகிய காலகட்டத்தில்மூன்று தடவை காயமடைந்த நிலையிலும் அவர் காட்டிய உறுதி அதிஉச்ச உளவுரனை எமக்குத் தந்தது. அந்த மாவீரன் இறுதியாக எம்மை விட்டுப் பிரியும் அவ்வேளையிலும் எமது இயக்கத்தின் நலன் கருதி தனது ஆயுதம் எதிரியின் கையில் அகப்படக்கூடாது என்ற காரணத்திற்காகவும், தான் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்ற காரணத்திற்காகவும்விழுப்புண்ணடைந்த நிலையில் தான் உயிர் தப்பிக் கொள்வது சாத்தியம் இல்லை என்பதை உணர்ந்து தனது தோழனுக்குக் கட்டளை பிறப்பித்து அந்தத் தோழனின் துப்பாக்கிக் குண்டின் மூலம் தனது உயிரை இந்த மண்ணில் துறந்தான்.

இப்படிப்பட்டதொரு புதிய மரபைத் தோற்றுவித்ததுடன் திருமலை மண்ணின் முதல் மாவீரன் என்ற பெயரைப் பெற்றதுடன் தமிழீழ மண்ணிலேயே முதல் வித்தான விடுதலைப் புலிகளின் மாவீரன் என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டவர்.

அன்று அவரது இழப்பைத் தாங்க முடியாத எமது தலைவர் அவரது உடை அணிந்தே பதிலடிக்குப் புறப்பட்டு 23.07.1983 அன்று திருநெல்வேலியில் இராணுவத்தினரின் வாகனத் தொடரணி மீது கண்ணிவெடித் தாக்குதலொன்றை நடத்தினார். எமது போராட்டவரலாற்றில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியது இத்தாக்குதல்.

அவரது நினைவை நினைவு கொள்ளும் இவ்வேளையிலேயே அவரது நாமத்தின் பெயரால் உருவாக்கப்பட்ட 'சாள்ஸ் அன்ரனி' சிறப்புப் படையணி 1991 ஏப்பிரல் 10 ல் தோற்றம் பெற்றதில் இருந்து 'வன்னி விக்கிரம' இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரில் தொடங்கி இன்றைய திருப்பு முனைக்குக் காரணமாக அமைந்த 'அக்கினி கீல' முறியடிப்புச் சமரிற்கு இடைப்பட்ட காலங்களில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வலிந்து தாக்குதல் நடவடிக்கைகளிலும் முதல் தரமான பகுதிகளை பொறுப்பெடுத்து அதை செய்து முடித்து வெற்றி பெற்றுத் தந்தார்கள், எதிரியால் மேற்கொள்ளப்பட்டபல இராணுவ நடவடிக்கை முறியடிப்பு தாக்குதல்கள். பலஅதிரடித் தாக்குதல்களையும் நடாத்தி பல வெற்றிகளை இவரின் வழிநடத்தலில் இந்த விடுதலை இயக்கத்திற்கு பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

இந்தப் படையணியில் இருந்து தமிழீழ மண்ணின் விடுதலைக்காகப் போராடி இதுவரை 11 தளபதிகள் உட்பட 1100வரையான மாவீரர்கள் இன்னுயிர்களை ஈந்துள்ளார்கள். அவர்களை இந்த இடத்தில் நினைவு கொள்ளும் இவ்வேளை நாம் உலகம் வியக்கும் வண்ணமும் எவருமே கற்பனை செய்து பார்க்க முடியாததுமான பல இராணுவ வெற்றிகளை ஈட்டி பலமான நிலையில் நின்று கொண்டு, எமதுமக்களுக்கான உரிமையினை சமாதான வழியில் அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் இன்றைய காலகட்டத்தில் சென்று கொண்டிருக்கின்றோம்.

எமது பலத்தின் மூலமே இன்றைய புரிந்துணர்வுஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. அந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நிலைத்து சமாதான வழியில் எமது மக்களுக்கான உரிமைகள் மீட்டுக்கொடுக்கப்பட்டு நிரந்தரமான நம்பகமான தீர்வு வரும்வரை படையணியைச் சேர்ந்த போராளிகள் விழிப்புடன் தயார்நிலையில் இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (இ)

## முகாமைத்துவ பயிலுநர் ஆட்சேர்ப்பு பரீட்சை 21ஆம் திகதி கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் முகாமைத்துவ பயிலுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த 69பேருக்கு மேலும் ஓர் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு றோயல்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான அனுமதியட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

மானிப்பாய், செல்வி எஸ் இராமலிங்கம் சுன்னாகம் ஆர். கோகுலதாஸ் பருத்தித்துறை, செல்விபி.ரஞ்சிதமலர் வல்வெட்டித்துறை, செல்வி எஸ். சந்திரசேகரம் புத்தூர், எஸ். ரஜுமேஷ் யாழ்ப்பாணம், ஆர். ஜோய் இன்பராஜ் மல்லாகம், செல்வி ஆர். கனகரட்ணம் கரவெட்டி, கே. ஜெயதாஸ் அல்வாய், செல்வி ஜே.பாலசிங்கம் மானிப்பாய், செல்வி கே. கணேசரத்தினம் மாதகல், எம். தவலிங்கம் புலோலி, செல்வி ரி.தேவராஜ் யாழ்ப்பாணம், ரி. ஜே. ஜே. தேவதாஸ் பண்டத்தரிப்பு,

### சமாதான முயற்சிக்கு எதிராக

## தேச மீட்பு மாணவர் முன்னணி வீடு வீடாகச் சென்று பிரசாரம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டும் முயற்சியில் பல்

படுத்தும் வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலி

மக்களிடையே விளக்கி இவற்றுக்கெதிராக அவர்களை எழுச்சிகொள்ள வைப்பதே தேச மீட்பு மாணவர் முன்னணி

அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

செல்வி எஸ். தயாவாணி சுன்னாகம் கிழக்கு, திருமதி எஸ். கஸ்தூரி அல்வாய், செல்வி ரி.கஸ்தூரி யாழ்ப்பாணம், ரி.தனேந்திரன் யாழ்ப்பாணம், ஈ. ஆனல்ட் யாழ்ப்பாணம், எஸ். பாலமுருகன் கரவெட்டி, செல்வி எல். மதிவதனா அல்வாய், கே.கிரிதரன் அச்சுவேலி, செல்வி எ. சஜந்தினி மல்லாகம், ஈ என். ரஞ்சித்ராஜ் ஆனைக்கோட்டை, எஸ்.சரச்சந்திரா வட்டுக்கோட்டை, பி கல்கி யாழ்ப்பாணம், கே.தவநேசன் கோப்பாய், எஸ். சங்கர்தாஸ் இணுவில், செல்வி கே.சரவணபவன் கொக்குவில், செல்வி ரி. நவநீதகிருஷ்ணன் யாழ்ப்பாணம், செல்வி ஈ. நலங்கினி யாழ்ப்பாணம்,

செல்வி எம். வி. மயில்வாகனம் கொடிகாமம், பி. நகுலன் தெல்லிப்பளை, எஸ்.சஞ்சயன் யாழ்ப்பாணம், செல்வி எஸ். குமாரமனோகரி கரவெட்டி, செல்வி எஸ். கிருஷ்ணராசா காங்கேசன்துறை, எஸ்.மகேந்திரராஜா யாழ்ப்பாணம்,

திருமதி எம். கிரிதரன் கொக்குவில், செல்வி ஜே. குமாரசாமி வட்டுக்கோட்டை, செல்வி ஆர். பொன்னையா மானிப்பாய், செல்வி எஸ். மகாதேவன் உரும்பிராய் தெற்கு, கே.கிருபாகரன் கரவெட்டி, செல்வி ஆர். ரணசிங்கம் மாதகல், எம். தவலிங்கம் புலோலி, செல்வி ரி.தேவராஜ் யாழ்ப்பாணம், ரி. ஜே. ஜே. தேவதாஸ் பண்டத்தப்பு, திருமதி கே. வெண்ணிலா புத்தூர், செல்வி எஸ். விஸ்வலிங்கம் யாழ்ப்பாணம், செல்வி ஜி. சதாசிவசர்மா சாவகச்சேரி, எஸ். சத்தியசீலன் கரவெட்டி, எஸ்.சத்தியசீலன் வட்டுக்கோட்டை, செல்வி ஜி ராசதுரை சுன்னாகம், செல்வி ஜே. செல்லத்துரை அச்சுவேலி, திருமதி ஜி.செல்வசந்திரன் ஆனைக்கோட்டை, செல்வி ஆர். செல்வமதி கரவெட்டி, எம். செல்வரட்ணம் உடுப்பிட்டி, என்.சுரேஷ் கரவெட்டி, செல்வி ரி.தங்கவேலு தெல்லிப்பழை, ஆர்.சுகாஜனன் யாழ்ப்பாணம், செல்வி எஸ்.தர்மலிங்கம் வல்வெட்டித்துறை,

ரி.தனேந்திரன் யாழ்ப்பாணம், செல்வி எஸ். சிவகுமாரன் யாழ்ப்பாணம், எம்.சுகந்தன் யாழ்ப்பாணம், செல்வி எஸ்.சுபாசினி சுன்னாகம், எஸ் வசந்தகுமார் யாழ்ப்பாணம், திருமதி ஜே. விக்னேஷ் யாழ்ப்பாணம், எஸ். சூரியகுமாரன் யாழ்ப்பாணம், எ. அன்ரன் அருள்ராஜ் முல்லைத்தீவு, என் உதயகுமார் கிளிநொச்சி, ரி.கணேசராஜா முல்லைத்தீவு, எம். கிருபாகரன் முல்லைத்தீவு, பி. லோகேஸ்வரன் மாங்குளம், திருமதி ஆர். எம். ஏ. தவநாயகம் யாழ்ப்பாணம்.

(உ- 3)

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் முயற்சியில் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட தேசமீட்பு மாணவர் முன்னணி என்ற அமைப்பு ஈடுபட்டுள்ளது.

வடக்கு கிழக்கைத் தவிர்ந்த 15 மாவட்டங்களில் வீடு வீடாகச் சென்று இக் குழுவினர் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்களை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டை பிளவுபடுத்தும் சூழ்ச்சி என்பதை மக்களிடையே விளக்கி இவற்றுக்கெதிராக அவர்களை எழுச்சிகொள்ள வைப்பதே தேச மீட்பு மாணவர் முன்னணியின் நோக்கமாகும்.

இவர்களது பிரசாரப் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ)

## கட்டுநாயக்கா விமான நிலையம் அபிவிருத்தி

(கொழும்பு)

கட்டுநாயக்காவிமான நிலையத்தை பலகட்டங்களாக அபிவிருத்தி செய்ய அரசு தீர்மானித்துள்ளது இதற்கு சர்வதேச ஒத்துழைப்பிற்கான யப்பானியவங்கி சலுகை வட்டி அடிப்படையில் 10கோடி அமெரிக்கடொலர்களை வழங்கியுள்ளது.

இத்திட்டம் முதற்கட்டமாக இருவருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளது:

இவ் விமானநிலையத்தின் மூலம் வருடாந்தம் அதிகபயணிகளும் பயணம்செய்வதுடன் அதிகபொருட்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன இதனால் இந்தவிமான நிலையத்தின் வசதிகளை மேலும் விஸ்தரிக்க இலங்கைவிமானக்கம்பனி நடவடிக்கைஎடுத்துள்ளது' (ந.5)

# மூத்த கூட்டுறவாளர் விருது பெறும் சிவமகாராசா

(யாழ்ப்பாணம்)



வடபகுதியின் மூத்த கூட்டுறவாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். சிவமகாராசா 'மூத்த கூட்டுறவாளர்' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

நாளை வியாழக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரியா தலைமையில் நடைபெறவுள்ள 80-வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவிலும் முதுபெரும் கூட்டுறவாளர்களை நினைவு கூரும் வைபவத்திலும் கூட்டுறவு அமைச்சர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம் அப்துல்காதரினால் எஸ்.சிவமகாராசாவுக்கு மூத்த கூட்டுறவாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

முதுபெரும் கூட்டுறவாளர் எஸ்.சிவமகாராசா நீண்டகாலமாக தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் யாழ் மாவட்ட விவசாய சமாசத்தின் தலைவராகவும், யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவராகவும், இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் பணிப்பாளராகவும், வலிவடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் தலைவராகவும், வலிவடக்கு புனர்வாழ்வுக்கழக தலைவராகவும் இருந்துள்ளார்.

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்திற்குப் பின் கூட்டுறவாளர் விருது பெறும் முதலாவது கூட்டுறவாளர் இவராகும். (ம)

# வை. கோ. கைது செய்யப்பட்டமை

# பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

## இந்து சமயப்பேரவை ஜெயாவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி அண்மையில் கைது செய்யப்பட்டமை எமக்கு பேரதிர்ச்சியையும் பெரும்கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

வை. கோவின் கைது தொடர்பாக இந்து சமயப் பேரவை தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெறும் போர் நிறுத்தப்பட்டு சமாதானச் சூழ்நிலை வலுவடைந்து வரும் நேரத்தில் தங்கள் அரசு மேற்கொண்டுள்ள முடிவு இலங்கை வாழ் தமிழ் மக்களை அநாதைகளாக்கும்நடவடிக்கையாகவே அமைந்துள்ளது என்பதை தங்களின்கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

இலங்கை தமிழ் மக்கள் இந்தியாவின் மீது அளவற்ற அன்பும், தாய்மைஉணர்வும் உடையவர்களாகவே உள்ளனர். இந்தியத் திருநாட்டில் அரசியல் தலைவர்களும் ஆத்மீகத் தலைவர்களும் மிகுந்த புரிந்துணர்வுடனேயேசெயற்பட்டு வந்துள்ளனர். இந்தியாவும் இலங்கையும் சுதந்திரப் போராட்டத்தை சமகாலத்திலேயேநடாத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளனர். இவ் விதம் இந்தியத் திருநாடும் எமது நாடும் எத்தகைய சந்தர்ப்பங்களிலும் ஒருமித்த கருத்து உடையதாகவே செயற்பட்டு வந்துள்ளது.

துரதிர்ஷ்ட வசமாக எமது நாட்டில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை தமிழ் சிங்கள மக்களை இரத்த வெள்ளத்தில் நீந்த வைக்கின்றது. தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை இலங்கை அரசாங்கம் வழங்காத காரணத்தினால் எமது தமிழ்த் தலைவர்கள் சாத்வீக ரீதியான போராட்டங்களை நடத்தினர். அவை தோல்வியில்முடிந்ததால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு தள்ளப்பட்டனர். இப்போராட்டத்தில்இலங்கை தீவில் வாழும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பேரிழப்புக்களை சந்தித்துள்ளனர்.

எமது நாட்டில்நடைபெற்ற இன மோதல்களின் போது தமிழ் மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட போதெல்லாம் இந்தியத் திருநாடு உதவியமை இந் நேரத்தில் ஞாபகப்படுத்துகின்றோம். எமது நாடு சுதந்திரம் பெற்ற வேளையில் அதற்காக அளப்பரிய தியாகங்களை செய்த சேர் பொன் இராமநாதன் இந்தியத் திருநாட்டின் தலைவர்களான அண்ணல் காந்திமகான், ஆசிய ஜோதி ஜெகவர்லால் நேரு போன்றவர்களுடன் மிகுந்த அன்பை பெற்றிருந்தமையை இந் நேரத்தில் ஞாபகப்படுத்துகின்றோம். 1980 களில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜீ. இராமச்சந்திரன் இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்காக அளப்பரிய தியாகங்களைச் செய்துள்ளார். இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வில் மேற்கொண்ட அணுகு முறைகள் சில துர்ப்பாக்கிய விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. இதற்காக சகல தரப்பினரும் சலிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வது இன்று அவசியமாகிறது.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கபோராடி வந்த பல அமைப்புகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் அந்த இலக்கை அடைவதில் உறுதியாக இருந்து வருகின்ற காரணத்தினால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமானால் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மனம் திறந்து பேச வேண்டும் என்ற யதார்த்தத்தை இன்று முழு உலகே ஏற்று விட்டது. இந்த சூழ்நிலையில் வை.கோபாலசுவாமி அவர்கள் ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக தம்மால் இயன்ற தியாகங்களை செய்து வருகின்ற போது அவரை தங்கள் அரசு கைது செய்துள்ளதை முழு தமிழ் உலகுக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. தங்களின் இந்த முடிவு இலங்கை வாழ் தமிழ் மக்களை மட்டும் அல்லாது சிங்கள மக்களையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

மதிப்பார்ந்த அம்மையார் அவர்களே தாங்கள் மேற்கொண்ட முடிவை உடனடியாக மீள் பரிசீலனை செய்து கௌரவ வை. கோபாலசாமி அவர்களை விடுதலை செய்ய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தங்களை மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கைத் திரு நாட்டில் தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட வேண்டும் என்று விரும்புவீர்களேயானால் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை வலுவாக்குவதே தங்களுக்கு உள்ள ஒரே வழிஎன்பதைஇந் நேரத்தில் தங்களின்மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம். இச்சமாதானச் சூழ்நிலை குழம்புமேயானால் இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் வீணாகவே அழிய வேண்டி வரும். இப் பேராபத்தில் இருந்து இலங்கைத் திரு நாட்டைக் காப்பாற்றும்பொறுப்பு தமிழ் நாட்டின் தலைவிஎன்ற வகையில் தங்களுக்கு உண்டு என்பதை அறியத் தருகின்றோம். தங்களின் சாதகமான முடிவில் தமிழினத்தின் விடிவு தங்கியுள்ளது என்பதை தங்களுக்கு ஆராமையுடன்சமர்ப்பித்து தங்களுக்கு சகலநலன்களும் கிடைக்க ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரனை பிரார்த்திக்கின்றோம்.

இக்கடிதத்தின் பிரதிகள் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், எதிர்க் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் காஞ்சிமடம் ஸ்ரீஜெகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஷ)

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தி வரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பி.ப. 4.30 மணிக்கு சென்றலைற்ஸ் வி. க. எதிர்சென்றல் வி. க, பி.ப 5.15 மணிக்கு ஒல்ட் கோல்ட் வி. க. எதிர் ஜொனியஸ் வி. க. ஆகியன பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

# வயல்நிலங்களுக்கு செல்ல முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்க கோரிக்கை

(கொழும்பு)

செங்கலடி பதுளை வீதிக்கு அண்மையிலுள்ள முஸ்லிம் மக்களின் வயல் பிரதேசங்களுக்கு அவர்கள்எவ்விதகட்டுப்பாடுமின்றி சென்றுவர வழி வகுக்கும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஏதுவாக தமிழீழ விடுதலைப் புலிகள், முஸ்லிம் பிரமுகர்களுக்கு பகிரங்க அழைப்பு விட வேண்டும் என்றுவீடமைப்பு பிரதியமைச்சர் பசீர் சேகுதாவுத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏறாவூரில் ஐயங்கேணியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முஸ்லிம்காங்கிரஸின்பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதேஅவர் இந்த வேண்டுகோளைவிடுத்துள்ளார்.

முஸ்லிம் விவசாயிகள் ஒவ்வொருவரும் எவ்வித கட்டுப்பாடுமின்றி சுதந்திரமாக சென்றுதமது வயல்நிலங்களைப் பார்வையிடுவதற்கும், பயன்படுத்துவதற்கும், குத்தகைக்கு வழங்குவதற்கும் அனுமதிக்கவேண்டும்.

1990 ஆண்டுமுதல்போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்த செங்கலடிபதுளை வீதி நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டதும் தெரிந்ததே. (உ-8)

# துப்பாக்கிச் சூட்டுக்கு முஸ்லிம்கள் இருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு வாழைத்தோட்டப்பகுதியில் நேற்று இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது இரு முஸ்லிம் வர்த்தகர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவ்விரு வர்த்தகர்களும் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு சென்றுகொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவர்கள்இருவரும் ரி-56ரக துப்பாக்கி மற்றும்கைத்துப்பாக்கிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என மரண விசாரணை அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாக கொழும்பு தெற்குப் பகுதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எல். திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

மூன்றுபொலிஸ் குழுவினர் இதுதொடர்பாக விசாரணைகளைநடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான ஐவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுசிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐவர் நேற்றைய தினம் யாழ். மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

க. செல்வம், தி. சுதத்குமார், தி. ரவிச்சந்திரன் அல்லது றதன், க. உதயராசா, பி. ஜெயக்குமார் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகள் சட்டமா அதிபரினால் வாபஸ் பெறப்பட்டமைக்கு அமைய விடுதலை செய்யப்பட்டனர். (உ-2)

## வர்த்தக சம்மேளனக் குழு வருகை

(யாழ்ப்பாணம்)

கண்டியிலிருந்து 40 பேர் அடங்கிய வர்த்தக சம்மேளனக் குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு இம் மாதம் 26 ஆம் திகதி வருகை தரவுள்ளது.

இக்குழு யாழ்ப்பாணத்தில் எதிர்கால வர்த்தக நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளது. (ஷ-19)

## பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் மீசாலையில் இடம்பெற்ற ப. பரமேஸ்வரன் என்பவரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட 6, 7 ஆம் சந்தேக நபர்களான இராணுவத்தினர் கடந்த வெள்ளியன்று யாழ். மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வீரரட்ணஜக், நிரஞ்சன் ஜானக ஆகிய இருவருமே 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

1, 2, 3, 4, 5 ஆம் எதிரிகள் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# இயல்பு நிலை திரும்பும் வரை

# வெகுஜனப் போராட்டம் தொடரும்

## தென்மராட்சி மக்கள் நலச்சேவைச் சங்கம் மகஜர்

(துன்னாலை)

இலங்கைப் பிரதமரும் விடுதலைப்புலிகளின் தலைவரும் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வுஉடன்பாட்டின் பிரதான நோக்கம் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதாகும். தமிழ் மக்கள் எதுவித கெடுபிடிகளுமில்லாது சுதந்திரமாகத் தமது வாழ்விடங்களில் வாழவும், தொழில் செய்யவும், போக்குவரத்தை மேற்கொள்ளவும், வழிபடவும், கல்விகற்கவும் இந்தஒப்பந்தம் வழி அமைக்கிறது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை மதித்து நடக்காமல், அதனை மீறும் வகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவத்தின் செயற்பாடுகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இதனை தங்கள் கவனத்துக்கும், தங்கள் ஊடாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் கொண்டு வரவிரும்புகிறோம்.

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்க ஏற்பாட்டில் நேற்று முன்தினம்சாவகச்சேரியில் இடம்பெற்றபேரணியின் முடிவில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்ட மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

★ தென்மராட்சியில் பலபகுதிகள் இராணுவப் பிரதேசமாகஇருப்பதால் அப்பகுதிமக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் குடியிருக்கவிடாது தடுக்கப்பட்டுள்ளனர். 2660 குடும்பங்களுக்கு தமது சொந்த வீடுகளில் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது;

★ குடாநாட்டின் பிரதான நெல்விளையும் பிரதேசமான கண்டிவீதிக்கு மேற்குப்புறம் தொடங்கி தனங்கிளப்பு, மறவன்புலவு, அறுகுவெளிப் பகுதிகள் யாவும் இராணுவ வலயமாக மாற்றப்பட்டுள்ளது. தென்மராட்சியின் 4ஆயிரத்து 383 ஹெக்டர் விவசாயநிலப் பரப்பில் 2 ஆயிரத்து 992 ஹெக்டர் நிலப்பரப்பு இன்னும் பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கப்படவில்லை.

★ தென்மராட்சிப் பிரதேச மீனவர்கள் சுதந்திரமாகமீன் பிடிப்பதற்கான உரிமைமறுக்கப்பட்டுள்ளது. கோவிலாக் கண்டி, மற்றும் கச்சாய் கரையோரங்களில் தொழில் செய்யும் மீனவர்களுக்குப்பல்வேறு கட்டுப்பாடுகளும், வரையறைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

★ நுணாவில், கைதடி, நாவற்குழி, மீசாலைபோன்ற பகுதிகளில் மக்கள்வாழ்விடங்கள், வயல்கள் என்பவற்றை உள்ளடக்கி பாரிய இராணுவ முகாம்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இதனால்பலர் தமது வீடுகளை இழந்திருப்பதுடன், அம்முகாம்களுக்குஅருகிலுள்ளவர்களும் தமதுஇருப்பிடங்களில் வாழ்வதற்குஅஞ்சுகிறார்கள்.

★ 40க்குமேற்பட்ட கோவில்கள்வழிபாட்டுக்கு அனுமதிக்கப்படாதவையாயும், சுதந்திரமாகச் சென்று வழிபட முடியாதனவாகவும் உள்ளன.

★ ஆறு பாடசாலைகள் இன்னும் தமது சொந்த இடங்களில் இயங்க முடியாதவையாக உள்ளன.

★ இப்பிரதேச மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு மட்டுமல்ல, வாழ்வின் முடிவில் நிகழ்த்தும் 'இறுதிக்கிரியைகளுக்கும் கூட சுதந்திரம்மறுக்கப்பட்டுள்ளது. பிரதானமயானமான கண்ணாடிப்பிட்டி உட்பட 10 மயானங்கள் மக்கள் பாவனைக்குத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

★ பல வீதிகள் இன்னும் மக்கள் பயன்படுத்ததிறந்துவிடப்படவில்லை.

★ இப்பிரதேசத்தின் பிரதான வளமான பனைவளம் கண்மூடித்தனமாக தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவேயுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குஅறிவித்து யூலை 10 ஆம் திகதி சாதகமானபதிலைஎதிர்பார்த்தோம். எனினும் உறுதியான முடிவு எதுவும் கிடைக்கவில்லை.

எனவேதான், மேற்காட்டிய ஒப்பந்தமீறல்களை ஆராய்ந்து அவற்றை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து, இப்பிரதேச மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்று விப்பது. தென்மராட்சிப் பிரதேசத்தின் அரச செயலராகிய உங்களைச் சார்ந்ததாகும். சாதகமான பதிலை தங்களிடமிருந்து எதிர்பார்த்து நிற்கிறோம். சாதகமான பதில் கிடைக்காதவிடத்து, இப்பிரதேச மக்கள் தமது இயல்பு வாழ்க்கையைப் பெறத் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது; (உ-41)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 14

## பகுதி II

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
**கே.வி.குணசேகரம்**
**எம்.விக்னேஸ்வரன்**

**பின்வரும் பாடலைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

கூடி விளையாடுவோம்
குதூகலமாய்ப் பேசுவோம்
ஓடியாடிப் பாடியே
ஒற்றுமையாய் வாழுவோம்.

**சரியான விடையைச் சுற்றிக் கட்டமிருக.**

(01) இப்பாடல் உணர்த்துவது :-
1. ஒற்றுமையை 2. மகிழ்ச்சியை 3. விளையாட்டை

(02) இப்பாடலை படிப்பவர் :-
1. பாடகர் 2. மாணவர்கள் 3. பெண்கள்

(03) இப்பாடல் பாடும் இடம் :-
1. வயல் 2. கடற்கரை 3. பாடசாலை

(04) குதூகலம் என்பது :-
1. மகிழ்வு 2. கலகலப்பு 3. நகைச்சுவை

**சுருக்கமான விடை தருக.**

(05) எப்படி விளையாடல் வேண்டும்..............................................
(06) ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல் ..............................................
(07) 'பேசுவோம்' எதிர்மறையில் தருக..............................................

**பின்வரும் பாடல் வரிகளை முடிக்குக.**

பந்து, துள்ளி, ஓடி, தந்து, சொற்களைப் பயன்படுத்துக.

(08) காலில்லாமல் ..............................................
(09) காற்றாய் எங்கும் ..............................................
(10) வெற்றி .............................. தந்து
(11) எம்மை மகிழச் செய்யும் ..............................................

**பின்வரும் பாடலைப் படித்து 12 - 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

பென்னம் பெரிய குன்று ஒன்று
அசைந்து அசைந்து வருகுது
சுளகு போன்ற காதுகளை
ஆட்டி அசைத்து வருகுது

(12) பென்னம் பெரிய குன்று எனக் கூறப்படுவது யாது..............................................
(13) சுளகு என்பதன் ஒத்த சொல் ..............................................
(14) காது என்பதன் பன்மைச் சொல்..............................................
(15) இப்பாடலில் வர்ணிக்கப்படும் மிருகத்தின் ஆண் எவ்வாறு அழைக்கப்படும்..........
(16) இம் மிருகத்தைச் செலுத்துபவனை எவ்வாறு அழைப்பர்..............................................

**கீழே கதை ஒன்று ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதை ஒழுங்கு படுத்தி 17 -24 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A. ஆமை நீரில் நீந்தி மறைந்தது.
B. குளக் கரையால் ஆமை ஊர்ந்து வந்தது.
C. நரி ஆமையை உண்பதற்காகக் கடித்தது.
D. குளக்கரையில் நரியொன்று பசியோடு காத்திருந்தது.
E. ஆமையின் ஓடு வைரமாக இருந்தது.
F. நீர் குடிக்க வரும் மிருகங்களைப் பிடிக்கலாம் என அது நினைத்தது.
G. வெகு நேரமாக மிருகங்கள் எவையும் வெளியே வரவில்லை.
H. நரி ஆமையின் ஓடு இளகுவதற்காகக் குளத்தில் கௌவிச் சென்று போட்டது.

(17)..............................................
(18)..............................................
(19)..............................................
(20)..............................................
(21)..............................................
(22)..............................................
(23)..............................................
(24)..............................................
(25) இக்கதைக்குப் பொருத்தமான தலையங்கம் (பெயர்) இடுக.
(26) வேடன் மானைத் துரத்திச் .............................. நிகழ் காலத்தில் முடிக்குக.
(27) நாளை நான் கோயிலுக்குச் .............................. எதிர்காலத்தில் முடிக்குக.

**பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக.**

(28) துயில், துகில், நித்திரை, உறக்கம்.
(29) கோபம், சினம், சீற்றம், அகங்காரம்.
(30) மணம், வாசனை, இனிமை, சுகந்தம்.

**ஒரு பாடசாலையில் சுற்றுலாவுக்குச் சென்ற, செல்லாத மாணவர் விபரம் கீழே தரப்படுகின்றது. அதைக் கிரகித்து 31 - 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

| | சுற்றுலா சென்றோர் | | சுற்றுலா செல்லாதோர் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| தரம் I | 32 | 27 | 5 | 3 |
| தரம் II | 41 | 29 | 4 | 6 |
| தரம் III | 28 | 36 | 8 | 4 |
| தரம் IV | 38 | 43 | 3 | 2 |
| தரம் V | 46 | 31 | ------ | 6 |

(31) தரம் ஒன்றிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?
(32) தரம் இரண்டில் கற்கும் பெண்களின் மொத்தத் தொகை என்ன?
(33) எந்த வகுப்பில் கூடுதலான மாணவர்கள் சுற்றுலா செல்லவில்லை?
(34) தரம் 5ல் சுற்றுலா சென்ற மாணவர் எண்ணிக்கை?
(35) தரம் I லும் II லும் கற்கும் பெண்கள் பூங்கா ஒன்றிலுள்ள ஊஞ்சலில் ஏறி ஆடினர். ஒரு தடவையில் ஊஞ்சலில் 14 பேர் ஆடலாம். அவர்கள் எத்தனை முறை ஏறி ஆட வேண்டும்?
(36) பூங்காவினுள் பிரவேசிக்க ஒருவருக்கு நுழைவுக் கட்டணமாக 12.00 செலுத்த வேண்டுமாயின் ஐந்தாம் தர மாணவர்களின் நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
(37) தரம் 5 மாணவர்கள் நுழைவுக் கட்டணமாக 1000/= ரூபா கொடுத்தால் அவருக்குக் கொடுக்க வேண்டிய மிகுதிப் பணம் எவ்வளவு?
(38) சுற்றுலாவுக்குச் செல்லாத மாணவர்களின் தொகை எவ்வளவு?
(39) அவர்கள் சுற்றுலா சென்ற பஸ் வண்டியில் 25 லீற்றர் கொள்ளளவுடைய 8 பிளாஸ்ரிக் பரல்களில் நீரைக் கொண்டு சென்றனர். இடை வழியில் எல்லாப் பரல்களிலும் நீர் முடிவடைய மீண்டும் அதேயளவு நீர் நிரப்பப்பட்டது. சுற்றுலா முடிவில் 25 லீற்றர் நீர் எஞ்சியிருந்தது. அவர்கள் குடித்த நீரின் அளவு என்ன?
(40) சுற்றுலா சென்ற மாணவர்களிடம் பேருந்துச் செலவாக 45.00ரூபா ஒருவரிடம் அறவிடப்பட்டது. மாணவர்களிடம் அறவிடப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு?

**பின்வருவன சரியாயின் M எனவும் பிழையாயின் W எனவும் அடையாளம் இடுக.**

(41) இரசம் திரவ உலோகமாகும். ☐
(42) திரவத்திலும் பார்க்க வாயு குறைந்தளவில் விரிவடையும். ☐
(43) சந்திரன் ஓர் இயற்கை ஒளிமுதல். ☐
(44) நகைக்கடையில் சமாந்தர ஆடிகள் வைக்கப்பட்டிருக்கும். ☐
(45) வேலைகளை இலகுவாக்கப் பொறிகள் பயன்படும். ☐

**தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களை தமிழில் எழுதுக.**

(46) Body ..............................
(47) Hill ..............................
(48) Excuse..............................
(49) Camel..............................
(50) Together ..............................


**தரப்பட்டுள்ள தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

(51) செய்திகள்..............................
(52) சனிக்கிழமை..............................
(53) முத்திரை..............................
(54) வரைதல்..............................
(55) காலை உணவு..............................

**மின்சாரம் விரயமாகும் வழி முறைகளுக்குப் பொருத்தமான வசனங்களுக்கு எதிரேயுள்ள பெட்டிகளில் புள்ளடியிடுக.**

* மின் கேத்தல்களில் தேவைக்கதிகமான நீரைக் கொதிக்க வைத்தல். ☐
* தோட்டத்திற்கு நீர் இறைத்தல் ☐
* குளிர் சாதனப் பெட்டி பாவித்தல் ☐
* மின் அழுத்தியில் அதிகமாகச் சூடேற்றல் ☐
* ஆளில்லாத அறைகளில் மின் விசிறி சுற்றுதல் ☐

**ஆக்கப் பாடத்திற்கு விஞ்ஞான உபகரணம் செய்வதற்கு ஆரணி சேகரித்த பொருட்கள் இவை.**




(59) இவை மூலம் ஆக்கப்படும் உபகரணத்தின் பெயரென்ன?

கோழி இறக்கை தவிர்ந்த இவ்வுபகரணத்தை ஆக்குவதற்குத் தேவையான மூன்று பொருட்களின் பெயர்களைத் தருக.


(60)..............................................
(61)..............................................
(62)..............................................

அங்கயன் கீழேயுள்ள உருவுக்குள் நீரை இட்டான்.





(63) நீரைக் கடத்தும் உரு எது?
(64) விதைகளை நட்டுக் கன்றுகளை வளர்க்கப் பயன்படும் உரு எது?
(65) உரு B யின் உறை நீக்கப்படாது கன்றுகளை நாட்டினால் என்ன நடை பெறும்?
(66) உக்கக் கூடிய உறையுள்ள உரு எது?

கீழே தரப்பட்டுள்ள படத்தின் பகுதிகளைக் குறிக்குக.




(67) A ..............................
(68) B ..............................
(69) C ..............................



(70) இவ்வுரு நகர உதவுவது எது?
(71) இதன் சில்லு எதனால் ஆனது?

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

(72) தேசிய கீதம் முதன் முதல் பாடப்பட்டது.
1. 1948.02.04 2. 1972.05.22 3. 1950.02.04

(73) தேசிய இலட்சனையில் தாமரைப் பூ குறிப்பது
1. வீரம் 2. தூய்மை 3. அன்பு

(74) கிணற்று நீர் மாசடைவது
1. சவர்க்காரம், சம்போவால் 2. கழிவு எண்ணெய் கலப்பதால்
3. கிருமி நாசினி கலப்பதால்.

''வெளி நாட்டிலுள்ள மாமாவுடன் தொலை பேசியில்...'' தொடர்ந்து ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் குறைந்தது நான்கு சொற்கள் இருத்தல் வேண்டும்.''

(75) ..............................................
(76) ..............................................
(77) ..............................................
(78) ..............................................
(79) ..............................................
(80) ..............................................

**கல்விப் பகுதி**
**வினாத்தாள் 14**
**"வலம்புரி",**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**மாணவர் முழுப்பெயர் :-** ..............................
**சொந்த முகவரி :-** ..............................
**கற்கும் பாடசாலை :-** ..............................
**இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாள்களுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.**

# இன்று ஒரு தகவல்

## பெரியார் அனுப்பிவைத்த பொட்டலம் என்ன?

திராவிட நாடு இதழில் அண்ணா எழுதிய ஒருகட்டுரைக்காக வழக்குத் தொடுத்தார்கள், கட்டுரை வகுப்புக் கலவரத்தைத் தூண்டிவிடக் கூடியதாக எழுதப்பட்டுள்ளது என்பதே அவர்மீதான குற்றச்சாட்டு. வழக்கில் அண்ணா மூவாயிரம்ரூபாய் ஜாமீன் செலுத்தவேண்டுமென்று ஆளுவோர் கட்டளை பிறப்பித்தார்கள், அத்தொகை கட்டப்படாவிட்டால்திராவிடநாடு ஏடு வெளிவர முடியாமல் போய்விடலாம் என்றநிலை உண்டாயிற்று.

அதுகண்டு அண்ணாவின் அருமைத்தம்பிகள் பரபரப்படைந்தார்கள். சுறு சுறுப்போடு பணவசூல் செய்தார்கள். விரைவில் மூவாயிரம் ரூபா வசூலாகிவிட்டது. கழகத்தம்பிகளும். மக்களும் திரட்டித் தந்த மூவாயிரம் ரூபாவை அண்ணா அரசினர் ஆணைப்படி கட்டிவிட்டார். பணம் கட்டியாகிவிட்டதே என்று அண்ணா சும்மாவிருக்கவில்லை. உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்தார். வழக்கின் முடிவு அவருக்குச் சாதகமாயிற்று'' அண்ணாவின்கட்டுரைகளில் அப்படியொன்றும் சட்டத்துக்கு விரோதமானகருத்துக்களைக் காணவில்லை. அவவை வகுப்புக்கலவரத்தைத் தூண்டிவிடும்படியாக அமைந்திருக்கவில்லை என்று உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புப் வழங்கினார்கள்.

தீர்ப்பின்படி அண்ணா ஜாமீனாகக் கட்டியிருந்த ரூபாய் மூவாயிரத்தையும் திருப்பித்தந்து விட நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்தனர். அண்ணாவின் அந்தவெற்றி அவருடைய எழுத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். தீர்ப்பின்படி அண்ணா திரும்பப்பெற்ற ரூபாய் மூவாயிரத்தை. யாரெல்லாம் அதற்காகப் பணம் கொடுத்தார்களோ அவர்களிடமே திருப்பித்தந்துவிட்டார். அண்ணாவின் உள்ள நேர்மைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மற்றொரு சமயம் ''ஆரியமாயை'' என்னும் நூல்வழக்கில் எழு நூறு ரூபாய் அபராதம் செலுத்தவேண்டும். செலுத்தத் தவறினால் ஆறு மாதம் வெறுங்காவல் தணடனை அனுபவிக்கவேண்டும் என்று தீரப்பாயிற்று அபராதம் கட்டமறுத்த அண்ணா சிறை புகுந்தார். சிறைவாழ்வின் பொழுது அவருக்குப் புதிய அனுபவம் ஏற்பட்டது. அதே திருச்சி சிறையில் பெரியாரும் அடைபட்டிருந்தார். அரசியலில் அண்ணாவுக்கு யார் வழிகாட்டியாக அமைந்தாரோ, யாரை அண்ணா தம் அரசியல் தலைவராக, ஏற்றுக் கொண்டாரோ அந்தப் பெரியார் அதே சிறையில் இருந்தார்.

தி.மு.க.தொடங்கிய பிறகு இப்படி ஒரு சந்திப்பு சிறையில் நேரிடும் என்று இருவரும் எதிர்பார்க்கவேயில்லை.

பெரியாரும் அண்ணாவும் பக்கத்துப்பக்கத்து அறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இருவரையும் கண்டுபேச எத்தனையோ பேர் வந்தார்கள். இரண்டுபேரையும் சந்தித்துப் பேசினார்கள், அவர்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம் ஏற்பட்டது பெரியாரும் அண்ணாவும் பேசிக் கொள்வார்களா? என்பது தான் அது, ஆனால்அவர்களின்உள்ளத்தில் அந்த எண்ணம் எழுந்தாலும் இருவரும் சிறை .அறைகளில் பேசிக்கொள்ளவேயில்லை.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு சிறைக்கைதி அண்ணா இருந்த அறைக்குள் வந்தான். அவன் கையில் ஏதோ பொட்டலம் இருந்தது, அதை அவன் அண்ணாவிடம் நீட்டி 'ஐயா' இதைத் தங்களிடம்கொடுக்கச் சொன்னார். என்று பணிவோடு தந்து விட்டுப் போனான்.

பெரியார் தந்த பொட்டலத்தைப்பிரித்தார் அண்ணா. அதில் ஆறு பிஸ்கட்டுகள் இருந்தன அவைகளைப்பார்த்ததும் அண்ணாவுக்குப் பல நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. பெரியாரின் பிறவாப் பிள்ளையாக,குறையாத பாச உணர்ச்சியோடு, ஈரோடிலே இருந்து வந்த அந்தக்கால நினைவுகளெல்லாம் புரண்டு வந்தன. தந்தை அனுப்பி வைத்த அந்தப் பிஸ்கட்டுகளைப் பிரியத்தோடுசாப்பிட்டார் அண்ணா, என்னதான் கொள்கை காரணமாக இருவரும் பிரிய நேரிட்டாலும் உளளத் தொடர்பை எளிதில் துண்டித்துக் கொண்டு விட முடியுமா?

அடுத்த நாள் எதிர்பாராத விதமாக இருவருக்கும் விடுதலை கிடைத்தது சிறை வாசலில் பெரியாரும் அண்ணாவும் சந்திக்க நேர்ந்தது. வாய் விட்டு இருவரும், இருவருடைய இதயங்களும் பேசிக் கொண்டன. சிறைவாசலில் வந்து நின்றிருந்த பெரியாரையும் அண்ணாவையும் போட்டோ எடுப்பவர்கள் எப்படியோ பிணைத்து விட்டார்கள், அந்தச் சிறை அனுபவம் பற்றி அண்ணா குறிப்பிடுகையில்;' சிறையில் இருந்த பத்து நாட்களில் பெரிய ஓர் ஆபத்துக் காத்திருந்தது. தி மு. க. என்னும் புதிய அமைப்புக்கு ஆபத்து உண்டாகியிருக்கும் என்று சிலர் கருதினார்கள், உண்மை தான் ஆனால் அவ்வளவு சுலபத்தில் என் மனதை நான் தளரவிடவில்லை என்றார்.

நவீனன்

# சீனோர் கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு

# மீளக்குடியமர்ந்தோர் கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காடு-சாந்திபுரம் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் தாம் சாந்திபுர- சீனோர் கடற் பகுதியில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு தோப்புக்காடு கிராமக் முன்னேற்றச் சங்கத்தினூடாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரைக் கோரியுள்ளனர்.

சாந்திபுரம்- சீனோர் கடற் பிரதேசம் கடற்படையினரின் பாதுகாப்பு பிரதேசமாகும். காரைநகர் கடற்படைத் தளத்தினை அண்டி இருப்பதனால் இது வரை எவருக்கும் மீன்பிடி தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தரை வழிப் பாதையினூடாக இப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களே இவ்வாறு கோரிக்கை விட்டுள்ளனர்.

கடற்கரையில் போடப்பட்டிருக்கும் முட் கம்பி வேலிகள் அகற்றப்பட்டு தோப்புக்காடு- சீனோர் பிரதான வீதி தமது பாவனைக்காக அனுமதிக்சப்பட வேண்டும் என்றும் அவர்கள் மேலும் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக காரைநகர், கடற்படை அதிகாரிகளின் கவனத்திற் கொண்டுவரப்பட்டு நடவடிக்கை எடுப்பதெென உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

## மாநாடு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஓர் அரசியற் கட்சியாக பதிவு செய்வது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கும் பொருட்டு எதிர்வரும்23 ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புஅலுவலகத்தில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. (த-43)

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

எம்.டி. குணசேனவின் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரியில் கல்லூரி அதிபர் க. இராசதுரையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 'பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அதிகாரி ஆ இராஜகோபால்கலந்துகொண்டார்.

இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளதுகுறிப்பிடத்தக்கது. (உ-3)

## திருட்டு குற்றத்தின் பேரில் முன்னணி பாடசாலைகளின் மாணவர்கள் நால்வர்கைது

(கொழும்பு)

கொழும்பு, கொம்பனி வீதிப் பொலிசார்முன்னணிப் பாடசாலைகளின் மாணவர்கள் நால்வரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் அப்பகுதியிலுள்ள சிறு தேநீர் கடைகளுள் இரவு நேரத்தில் திருட்டுத்தனமாக புகுந்து அங்குள்ள உணவுப் பொருட்கள், மென்பானங்களை திருடியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவேளை இவர்களில் இருவர் கத்திகள் வைத்திருந்ததாகவும் மற்றைய இருவரும் ஸ்குறூறைவர்கள்' வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வழமையாகவே இந்தக்கடைகளிலும் இரவில் புகுந்துபிஸ்கட், சொக்கலேட், போன்றவற்றை எடுத்துச் சென்றிருக்கின்றனர் என கொம்பனிவீதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பந்து திலக தெரிவித்துள்ளார்.

இருவர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்என்றும் மற்றஇருவரும் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## வற்றுவரி வாக்களிப்பு பொ.ஐ.மு.எம்.பிக்கள் 10 பேரிடம் விளக்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 'வற்றுவரி' சட்டமூலம் வாக்களிப்புக்கு விடப்பட்ட போது அங்கு பிரசன்னமாயிராத பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து' எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ விளக்கம்கோரவுள்ளார்.

அநுரா பண்டார நாயக்க உட்பட பொ ஐ.மு . உறுப்பினர்கள் 10 பேர் அன்று சபையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த சட்ட மூலத்திற்கு எதிராக வாக்களிப்பதென எதிர்க்கட்சிதீர்மானித்திருந்த நிலையில் வாக்களிப்பில் கலந்து கொள்ளாதிருப்பது பாரதூரமான தவறு என அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த 10எம்.பிக்களிடமும் விளக்கம் கோருமாறு மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி பிரதான கொரடா மங்கள சமரவீரவிடம்கேட்டுள்ளார். வற்றுவரிசட்டமூலத்திற்குஆதரவாக102 பேரும்எதிராக 69 பேரும் வாக்களித்து அச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே. (உ)

## நெஞ்சுறுத்தும் கானல் 70 பாடசாலைகளில் இதுவரை மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களை மிதி வெடிகள் மற்றும் வெடி பொருட்களில் இருந்து பாதுகாக்கும்நோக்குடன்யுனிசெப் நிறுவனமும் அகதிகள் புனர் வாழ்வுநிறுவனமும்இணைந்து செயற்படுத்திவரும் நாடக ஆற்றுகையான நெஞ்சுறுத்தும் கானல் என்ற நாடகம் யாழ். மாவட்டத்தில் இதுவரை 70 பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டுள்ளது.

20 இளைஞர்களின் முழு நேரஈடுபாட்டுடன்நடைபெற்றுவரும் இந் நாடக ஆற்றுகை மூலம் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இந்நாடக ஆற்றுகைமூலம் மிதிவெடிகள் மற்றும் வெடி பொருட்களால் ஏற்படும் பாதிப்புக்கள்அண்மை காலத்தில்குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தே. தேவானந் நெறியாள்கையில் உருவான இந்நாடகத்திற்குகவிஞர் இ. முருகையன் பாடல்களை எழுத றொபேட் இசையமைத்துள்ளார்.

நவீன நாடக உத்திகள் இசைப்பாடல்கள், புதிய கல்விச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பங்கு பற்றலூடான செயற்பாடுகள் என்பவற்றைஉள்ளடக்கிய இந் நாடகம்பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் பாராட்டுக்களையும்பெற்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது (உ-5)

அடிப்படை வசதிகள் இன்மையால்

## வடமராட்சி கிழக்கில் மாணவர் கல்வி பாதிப்பு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் தமது கலவியைத்தொடர்வதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் இயங்கத் தொடங்கியுள்ள நான்கு பாடசாலைகளில் ஆயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

கட்டடவசதியோ, தளபாட வசதியோ இல்லாமையினால் இம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

இது விடயத்தில் அதிகாரிகள் பாராமுகமாக இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (ஷ-42)

# முஸ்லிம்களுக்கு ஆயுதப் பயிற்சியா? ஆபத்தை உண்டு பண்ணும் முயற்சி

## பேரியல் அஷ்ரப் சீற்றத்துடன் நிராகரிப்பு

(கொழும்பு)

ஆபத்துகால நடவடிக்கையாக கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியிருப்பதை 'நுஆ' தலைவி பேரியல் அஷ்ரப் கண்டித்துள்ளார்.

இது பெரும் ஆபத்துக்களுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் கடந்த ஞாயிறன்று எதிர்க் கட்சி தலைவரின் அலுவலகத்தில் நடை பெற்ற செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இம் முறை அங்கீகாரம் பெறுமாயின் சிங்கள இளைஞர்களும் ஆயுதம் ஏந்துவதற்குத் தூண்டப்படுவர் என கருத்துத் தெரிவித்த அவர், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்திய ஐ.தே.க. முஸ்லிம் எம். பிக்கள், ரவூப் ஹக்கீம் முஸ்லிம்களின் ஏக தலைவரல்ல எனக் குறிப்பிட்டனர் என்றார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி முஸ்லிம்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. இதற்காக ஹக்கீம் போராடவும் இல்லை. இவ்வாறு அவர் மேலும் குற்றம் சாட்டிப் பேசினார். (உ)

# சிங்கப்பூர் தேசிய பல்கலையில் இலங்கை மாணவர்களுக்கு இடம்

(கொழும்பு)

சிங்கப்பூர் தேசியபல்கலைக் சழகத்தில் இலங்கை மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வதற்கான திட்டமொன்றைகல்வியமைச்சுஆரம்பிக்கவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கல்வியமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு மேற் கொண்ட முயற்சிகள் காரணமாக இவ் வாண்டு தொடக்கம் சிங்கப்பூரில் பல துறைகளில் இலங்கை மாணவர்கள் உயர்கல்வியை தொடரக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியை தொடரக் கூடிய கற்கை நெறிகளுள் கட்டிட நிர்மாணத் துறை, கலை, சமூக விஞ்ஞானம், காணியும் நிர்மாணிப்பும் வர்த்தக நிர்வாகம், சுற்றாடல், பொறியியல் துறை, கைத்தொழில் திட்டமிடல் துறை, சட்டம், மருத்துவம் என்பன அடங்கும்.

இதற்காக கிங்கப்பூர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த தூதுக் குழுவொன்று இலங்கை மாணவர்களை தேர்ந் தெடுப்பதற்காக இலங்கை வரவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஷ-8)

## பழைய சினிமாப் பாட்டினால் வந்த கேடு

(நெல்லியடி)

பஸ்ஸினுள் பாடல்களை இரசித்துக் கொண்டிருந்த இரு வயோதிப மாதுகள்தாம் இறங்க வேண்டிய இடத்தில் இருந்து பலதரிப்பிடங்களைத் தாண்டி இறங்கிய சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பஸ்ஸில் யாழ் பஸ் நிலையத்திலிருந்து கோப்பாய் சந்திக்கு ரிக்கெட் பெற்று ஏறிய இருவயோதிபப் பெண்கள் பஸ்ஸினுள் ஒலித்துக் கொண்டிருந்த பழையதிரைப் படப்பாடல்களைஇரசித்துக் கொண்டிருந்ததாகவும்,

பஸ்.புத்தூர்ச் சந்தியை அடைந்த போது தாம் பல மைல்கள் கடந்து வந்ததை உணர்ந்து அதிர்ச்சியடைந்ததாகவும் இருந்தும் ஏமாற்றம் அடைந்த நிலையில் அங்கு இறங்கி நடையைக்கட்டியதாகவும்,

இறங்கும் போது நடத்துநரால் ஏசப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

சினிமாப்பாட்டினால் வந்த விளைவை எண்ணி எண்ணி பயணிகள் சிரித்ததையும் அவதானிக்க முடிந்தது. (ஷ-247)

# மாணவர்களின் நோக்கங்கள் திசைதிருப்பப் படுகின்றனவாம்

## கல்வி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தித் தோல்வி கண்டவர்கள் இப்போது பாடசாலை மாணவர்களைத் தூண்டிவிட்டு வன்செயல்களை உருவாக்குவதற்கு முயலுகின்றார்கள்.

இவர்கள் விடயத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில்எச்சரித்துள்ளார்.

மாநாட்டில் மேலும் அவர் தெரிவித்ததாவது,

நாடு பிரியப் போவதாக கூறிக் கொண்டு தேசப்பற்றை ஏற்படுத்தி அமைப்புகள் பலவற்றை உருவாக்கி அவற்றின் மூலம் மாணவர்களை இதில் ஈடுபடுத்தி அரசியல்லாபம் தேடப்பார்க்கிறார்கள்.

1987, 89 ஆம் ஆண்டுகளில் இத்தகையபிரிவினைஅமைப்புகளை ஏற்படுத்தி மாணவர்களைப் பலிக்கடாவாக்கினர்.

இதனால் நாட்டில் பாரிய அழிவு ஏற்பட்டது. இத்தகைய நிலை மீண்டும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை நாடுஒரு போதும் அனுமதிக்க மாட்டாது என்றார்.

மேலும் பாடசாலைகளையோ, பல்கலைக்கழகங்களையோ நாம் ஒருபோதும் தனியாரிடம் ஒப்படைக்க மாட்டோம் என்றும் உறுதிபட அமைச்சர் கூறினார். (வ)

## அரசியல் பணிமனை கொம்மாந்துறையில் திறப்பு

(கொழும்பு)

கொம்மாந்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை நேற்றுக் காலை திறந்துவைக்கப்பட்டது.

கொம்மாந்துறைப் பொறுப்பாளர் அற்புதமேனன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், புலிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (உ-8)

## சம்பள உயர்வு கோரி பணி நிறுத்தப் போராட்டம்

### தொ.சங்கங்கள் தீர்மானம்

(கொழும்பு)

நாளொன்றுக்கு ஆகக் கூடுதல் 151 ரூபாசம்பளம் வழங்கப்படாத விடத்து ஓகஸ்ற் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பணி நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளப்போவதாக தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

முதலாளிமார் சம்மேளனத்துடன் நேற்று முன் தினம் இடம் பெற்ற சந்திப்பின் போது, 121 ரூபா அடிப்படைச் சம்பளம், 15 ரூபா மேலதிக கொடுப்பனவு, 18 நாட்களுக்கு மேல் பணி புரிந்தால் மேலதிக கொடுப்பனவு 15 ரூபா என்ற அடிப்படையில் 151 ரூபாவை நாளாந்தச் சம்பளமாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

முதலாளிமார் சம்மேளனம் இதற்குஉடனடியாகஇணக்கம் தெரிவிக்காததையடுத்து இன்று வரை சரியான பதிலளிக்க அவகாசம் வழங்கப் பட்டுள்ளது.

தவறுமிடத்து திட்டமிட்டவாறு போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டிற்கு குழை பிடுங்குவதற்காக மதிலில் ஏறிய போது மதில் உடைந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேல் ஆனந் (வயது-17) என்பவரே காயமடைந்தவராவார். (ஷ-6)

## சேதம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு வீதிகள் மிகவும் மோசமான நிலையில் சிதைவடைந்துள்ளன.

மாமுனை முதல் கட்டைக்காடு வரையான வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளால் இவ்வீதியூடாகப் பயணம் மேற்கொள்ளும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (ஷ-42)

## றோட்டறக்ட் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் இரண்டாவது நிர்வாகக்குழு பதவியேற்பு வைபவம்நேற்று கே.தேனுகா தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட றோட்டேரியன் என். வன்னியசிங்கம் 'மனிதர்' சஞ்சிகையை வெளியிட்டுவைத்தார். (ஷ-19)

## இராசி பலன்

17-7-2002
(ஆடி 01, புதன்)
அட்டமி மு.இ. 11 53 வரை
சித்திரை மு.இ. 11.33 வரை
ராகுகாலம்-12.00-1.30
நல்லநேரம்-4.30-6.00

**மேடம்**
நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், செய்தொழில் மேன்மை, உடல்நலம்

**இடபம்**
இலட்சுமிகரம், சென்ற இடத்தில் செல்வாக்கு, நோய் குணமடைதல், சகோதரர்உதவி

**மிதுனம்**
புத்திரரால் மனக்கவலை, தனவரவு, உறவினர்சந்திப்பு, முயற்சிதாமதம்

**கடகம்**
மனக்கிலேசம், போசன சுகம், வேலைக்கஷ்டம், தாய் வழிஉறவு

**சிங்கம்**
இனியசம்பவம், நற்செய்தி, காரியநன்மை, பொருள் சேர்க்கை

**கன்னி**
முயற்சிநிறைவேறும், கௌரவக்குறைவு, பெண்கள் நட்பு, குடும்பசுகம்

**துலாம்**
ஜனவசியம், நல்லஉணவு, கிடைத்தல், காரிய அனுகூலம், தேகநலன்

**விருச்சிகம்**
நித்திரைக்குறைவு, புதிய தொழில்சிந்தை, காரிய அலைச்சல், பெரியோர்மனஸ்தாபம்

**தனுசு**
அபகீர்த்தி, எதிர்பாராத நன்மை, குடும்பமகிழ்ச்சி, காரியஅனுகூலம்

**மகரம்**
இஷ்டசித்தி, தூரதேசச் செய்தி, தொழில்மேன்மை, ரோகநிலை

**கும்பம்**
புதியசிந்தை, காரியஅனுகூலம், பிரயாணம், பெரியோர்ஆதரவு

**மீனம்**
பிரயாணக்கஷ்டம், உறவினர் வெறுப்பு, உடல்நலக் குறைவு, காரியதாமதம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

## கொலைச்சந்தேக நபருக்கு பலத்தபாதுகாப்பு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் மற்றும் 'சட்டன' பத்திரிகை ஆசிரியர் ரோஹன குமார ஆகியோரின்கொலைச் சந்தேக நபரான 'மொறட்டு சமன்' என்பவருக்கு 12 பொலிஸாரும், ஆயுதம் தரித்தவர்களும் பாதுகாப்புவழங்கி வருகின்றனர்.

கடந்தவாரம் தலங்கம என்னும் இடத்தில்வைத்து இவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருந்ததும் இப்போது இவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதும் தெரிந்ததே. (உ)

## ஊழியர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்து காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டைபுகையிரதநிலையத்திற்குமுன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இலாபத்தில் இயங்குகின்ற காப்புறுதிக் கூட்டுஸ்தாபனத்தை அரசாங்கம் ஏன்தனியார்வசம்ஒப்படைக்கவேண்டுமென ஊழியர்கள் கேள்வி எழுப்பி உள்ளார்கள்.

இதேவேளை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார்மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் ஒரு லட்சம் கையெழுத்து வைக்கும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. (வ)

## வை. கோ. வுக்கு ஆதரவாக கூட்டமைப்பு ஏற்பாட்டில் உண்ணாவிரதப் போர்

(வவுனியா)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியை விடுவிக்கக்கோரி தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியாவில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலைகூடிய கூட்டமைப்பின் தலைவர்கள் இந்த முடிவினை எடுத்துள்ளதாக கூட்டமைப்பின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி வை. கோவை கைது செய்த தமிழக அரசு, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளமை தெரிந்ததே.

வை. கோபாலசாமியை விடுவிக்கக்கோரிகூட்டமைப்பு பிரதிநிதிகள் தமிழக அரசுக்கு அறிக்கைகளையும், கண்டனங்களையும் தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வெலிக்கடைச் சிறைக் கைதிகள் வசமிருந்து கையடக்க தொ. பே. மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைக்கைதிகள் வசமிருந்து 14 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 32 ஆயிரம் ரூபா பணம் என்பன பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன.

கடந்த 2 வாரங்களின் முன்னர் மேற்படி சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப் பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து கடந்த ஞாயிறன்று அங்கு நடத்திய தேடுதலின்போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவர்கள் வசமிருந்தே இவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## புதிய விமானப்படை தளபதிநேற்று பதவியேற்பு

(கொழும்பு)

விமானப் படையின் புதிய தளபதியாக எயர் வைஸ் மார்ஷல் பெரேரா நேற்று காலை பதவி ஏற்றுள்ளார்.

விமானப்படைத் தலைமை அலுவலகத்தில் விசேட அணி வகுப்பு மரியாதையுடன்இவர் அழைத்துச்செல்லப்பட்டார்: முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக் கொடி நேற்று முன் தினம் உத்தியோக பூர்வமாக புதிய தளபதியிடம் தமது பொறுப்புக்களை ஒப்படைத்திருந்தார்.

இவர் தனது பதவியை இராஜினாமாச் செய்ததை தொடர்ந்தே அந்த இடத்துக்கு பெரேரா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரம் 05 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள் 14 பகுதி I இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01. த. லக்சனா - வட இந்துமகளிர் கல்லூரி.
02. க.திவ்வியா - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
03. ச.வந்தனா - இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை.
04. றொ.செல்வின் - புனித பத்திரிசியார் கல்லூரி.
05. ப.மதுசாந் - தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.
06. கா. திவேயன் - எழாலை மகாவித்தியாலயம்.
07. நா. பிரகாஷ் - நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.
08. இ.பிரியா - சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
09. க. மதுராகரன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
10. சி.சிந்துசகனா - மாணிக்க வாசகர் வித்தியாலயம்
11. செ.ஜாதவன் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
12. த.அபராஜினி - கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்.
13. த.திஷா - அச்சுவேலி மத்திய கல்லூரி.
14. பி.டியோனிஸ்கூரே - மானிப்பாய் சென் ஆன்ஸ்ற்.
15. கு.கனிஸ்ரன் - மத்திய கல்லூரி.
16. றெஜிஜோன்சன் - யாழ் மத்திய கல்லூரி.
17. வி. முருகதாஸ் - தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை.
18. ஜெ.நிசான் - மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
19. தி.வசீகரன் - இந்து ஆரம்பப் பாடசாலை.
20. வி. நிரோசன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
21. செ. தெட்சாயினி - ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
22. வி.கிரிஜா - நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை.
23. ஆ. நிறோஜா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
24. த.வஜீதா - மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை.
25. ஏ. நிவேதிகா - உடுவில் மகளிர் கல்லூரி.
26. ஜீ.கொன்சன் - கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை.
27. வ.லக்ஸ்மன் மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
28. எ.அனந்தசயனன் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
29. க.வாசீகன் 'புனித ஜோண்பொஸ்கோ.
30. ச.ஜோன் சத்தியரஞ்சித் - உடுவில் மகளிர் கல்லூரி.
31. இ.விதுசன் யாழ் மத்திய கல்லூரி.
32. நி.பகீதரன் சங்குவேலி அ.த.க.பாடசாலை.
33. தா.பிரகதீஸ்வரசர்மா - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
34. செ.யோதினி - சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.
35. ம.நிகிந்தன் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
36. த.ஜனந்தனி - இந்து ஆரம்பப் பாடசாலை.
37. சி.ஜனதரன் - கோண்டாவில் சீ.சீ.த.க பாடசாலை.
38. த.வராகினி - கொக்குவில் சீ.சீ.த.க பாடசாலை.
39. சி.ரனுசியா - கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்.
40. கு.தக்ஷா - இந்து ஆரம்பப் பாடசாலை.
41. க.கஸ்தூரி - கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
42. ச.யதுகுலன் - மானிப்பாய் சென்ஆன்ஸ்
43. வ. செல்வகுமரன் - கைதடி குருசாமி வித்தியாலயம்.
44. தி.தர்சன் - கம்பர்மலை அ.த.க பாடசாலை.
45. எஸ்.ஜனகன் - பரியோவான் கல்லூரி.
46. ந.திருமாறன் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
47. றே.டெல்சியா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
48. ச.கணேஸ்பரன் - கோப்பாய் நாவலர் வித்தியாலய்ம்.
49. ஸ்ரீ. தருசன் - இந்து ஆரம்பப் பாடசாலை.
50. க.கண்ணன் - இந்து ஆரம்பப் பாடசாலை.
51. ந.சன்சிகா - புனித ஜோண் பொஸ்கோ
52. வி.அனுசியன் - யாழ்.மத்தியகல்லூரி.
53. க.பிரதீபன் - இந்து ஆரம்பப் பாடசாலை.
54. யோ.நிமல்ராஜ் - யாழ்.மத்திய கல்லூரி.
55. ம.நிவந்தன் - புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை.
56. ந.கௌசிகா - தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.
57. ச.திபாகர் - இந்து ஆரம்பப் பாடசாலை.
58. தி.நகுல்ராஜ் - கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.
59. க.கஜீபராஜ் - வயாவிளான் மத்திய மகாவித்தியாலம்.
60. ப.ஆரணி - தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.
61. வை.மதுவந்தி - உடுப்பிட்டி மகளிர்கல்லூரி.
62. ஸ்ரீ.மிதிலன் - உடுவில் மகளிர்கல்லூரி.
63. ஜீ.திபாகினி - விவேகானந்தா வித்தியாசாலை
64. ச.சமீரா - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
65 சோ.சிந்துகேயன் -யாழ். மத்தியகல்லூரி.
66. வி.பரசுராமன் - தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
67. கு.தமிழ்மதி - மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.
68. சா.லியோகிங்ஸ்ரன் - புனித பத்திரிசியார் கல்லூரி.
69. த.கோகுலன் - நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை
70. சோ.அஜந்தா - நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை
71. கு.சுமங்கலி - உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை.
72. சி.உசேந்தினி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
73. எஸ் விதுரன் - புனித ஜோண்பொஸ்கோ.
74. சி.சிவராம் - சென்ஜோன்ஸ் கல்லூரி.
75. தி.ஜிந்தூரகன் - சென்ஜோன் பொஸ்கோ.
76. இ.துவாரகா - கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை.
77. வா.நிலக்ஷி - புனித ஜோண் பொஸ்கோ.
78. அ.கரிகாலன் - மெ.மி.த.க.பாடசாலை.
79. க.பிரியங்கா - இந்து ஆரம்பப் பாடசாலை.
80. ஜெ.நிவிதா - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
81. அ.துளசி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
82. பா.சண்முகப்பிரியா - உடுப்பிட்டி மகளிர்கல்லூரி.
83. ப.குபேரன் - விசாலாட்சி வித்தியாலயம்.
84. சௌ.ஸ்ரீதர்ஷன் - அனலைதீவு வடலூர் அ.த.க.வித்தியாலயம்.
85. சி. மயூரன் - முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.
86. தெ.விஜயன் - உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
87. கு.கிருஷாளினி - சென்ஜோண்பொஸ்கோ.
88. ப.லக்சனா - சங்குவேலி அ.த.க பாடசாலை.
89. யோ.அசாத் - அளவெட்டி றோ.க.த.க பாடசாலை.
90. கு.லேகா - உடுப்பிட்டி மகளிர்கல்லூரி.
91. செ. ஜெகப்பிரியா - சென்ஜோன்பொஸ்கோ.
92. சி.நவாஸ்கர் - ஞானாசாரியார் கல்லூரி.
93. ஜெ.நிர்மலன் - நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்.
94. செ.பிரியங்கா திருக்குடும்பக் கன்னியர்மடம்.
95. செ. கோபிகா - கோண்டாவில் இந்துமகாவித்தியாலயம்.
96. யோ.நிலக்ஷன் - யாழ்.மத்திய்கல்லூரி.
97. வி.தீபன்ராஜ் - ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
98. க.கஸ்மன் - யாழ்.மத்திய கல்லூரி.
99. கு.நிசாந் - தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை.
100. யோ.கஜீந்தன் - நாவலர் வித்தியாலயம்.
101. ஸ்ரீ. சரண்யா - வைசத்தமிழ் வித்தியாலயம்.
102. க.நிறோஜா - கொக்குவில் சீ.சீ.த.க.பாடசாலை.
103. பி.நந்தினி - வல்வை வித்தியாலயம்.
104. மு. குணாதரன் - துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
105. பா.பிறேமசியா - உரும்பிரய் றோ.த.க.பாடசாலை.
106. வா.நிலானி உரும்பிராய் றோ.த.க.பாடசாலை.
107. பா.ஸ்ரீகுகன் - யாழ்ப்பாணக் கல்லூரி.
108. இ. நேசராஜ் - கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
109. இ.மதனிகா - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
110. சு. சூர்யா - உரும்பிராய் றோ.த.க பாடசாலை.
111. ஜி. தினேஸ்றைமன் - உரும்பிராய் றோ.த.க.பாடசாலை.
112. இ.மணிமாறன் - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
113. பு.வினஜா - வல்வெட்டி விநாயகர் வித்தியாலம்.
114. பி. யோபிதா - வல்வை சிவகுரு வித்தியாசாலை.
115. பி.ஜோதிகா - வல்லை சிவகுரு வித்தியாசாலை.
116. ப.சதாசினி - வல்வை சிவகுரு வித்தியாசாலை.
117. கு.சென்போல் - உரும்பிராய் றோ.க.த.பாடசாலை.
118. யோ. சுகன்யா - உரும்பிராய் றோ.க.த.பாடசாலை.
119. யோ.திருக்கணேசன் - உரும்பிராய் றோ.க.த.பாடசாலை.
120. அ. அனுஸ்ரிகா - உரும்பிராய் றோ.க.த.பாடசாலை.
121. இ.திவாகர் - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
122. வே. ஜெயந்தினி - வல்லை அ.மி.த.க பாடசாலை.
123. வா.நிலானி - உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை.
124. கே. சாயிராம் - உரும்பிராய் றோ.க.த.பாடசாலை.
125. கே.சந்திரகுமாரி - வல்வை ம.ம.வித்தியாலயம்.
126. பு.கோபிநாத் - வல்வை சிவகுரு வித்தியாசாலை.

குறிப்பு:—

அன்பு மாணவர் செல்வங்களே! விடைகளை வேறு தாளில் தெளிவாக எழுதி 22.07.2002 இற்கு முன் எமக்குக் கிடைக் கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

### கடந்தவாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

1) 3
2) 2
3) 2
4) முக்காரமிடும்
5) கற்றை
6) பந்து
7) வடு
8) தானம்
9) புதுமை
10) வெற்றி
11) 16
12) 3x3x8
13) 32
14) 1
15) 2
16) 3
17) 1
18) 1
19) பொருத்தமானது
20) 2
21) இரை
22) கூரை
23) மரை
24) கரை
25) 4
26) 5
27) 6
28) 1, 3
29) 1, 4
30) 1, 3
31) அமலன்
32) நிமலன்
33) ஜனனி
34) 9
35) காலை. 7.46
36-37) C/H/U
38) 7645
39) மா.த.க
40) கலைமான்

## கைதிகள் இருவர் தப்பியோட்டம்

(புத்தளம்)

புத்தளம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட இரு கைதிகள் நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளனர்.

இலங்கையிலிருந்து ஆட்களை வெளிநாடுகளுக்குச் சட்ட விரோதமாக அனுப்பி வைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சிறைச்சாலையின் கூரையைப் பிரித்துக் கொண்டு தப்பிச் சென்ற இவர்களைத் தேடும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் எனப் புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## கொழும்பில் இருவர் சுட்டுக்கொலை

(கொழும்பில்)

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கொழும்பு புதுக்கடை நீதிமன்றக் கட்டிடத்திற்கு அருகிலும் ஆமர் வீதி வெள்ளவத்தையிலும் துப்பாக்கிச் சூடுகளுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்துள்ளனர்.

புதுக்கடை நீதிமன்றக் கட்டடத்திற்கு அருகில் ரி.56 இயந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் 34 வயது மதிக்கத்தக்க ஒருவரும், ஆமர் வீதியில் 48 வயது மதிக்கத்தக்க ஒருவரும் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார்.

(இ-5)

## குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற உழவு இயந்திரம்-சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டுவிலைச் சேர்ந்த சு.பாலசிங்கம் (வயது 54) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(த-6)

### மிதிவெடி அபாயத் தடுப்பில் ஓர் புதிய யுக்தி

# நவீன நாடக உத்திகளைக் கையாண்டு தயாரிக்கப்பட்ட 'நெஞ்சுறுத்தும் கானல்'

யாழ் மாவட்ட மக்களை மிதிவெடிகள், வெடிப்பொருட்களில் இருந்து பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு ஒரு விழிப்புணர்வுச் செயற்திட்டத்தை யுனிசெப் நிறுவனமும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டம் நாடக ஆற்றுகையூடாக வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது. இதற்காக 'நெஞ்சுறுத்தும் கானல்' என்ற நாடகம் தயாரிக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் உள்ள எழுபது பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டுள்ளது. 2002ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் ஒருவருட காலத்துக்கு நடைபெறும். இதில் இருபது இளைஞர்கள் முழுநேரமாக ஈடுபடுகிறார்கள். சாவகச்சேரிப் பகுதியில் அதிகமாக மேடையேற்றப்பட்ட இந் நாடகத்தை இதுவரை நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் பார்த்து பயன் பெற்றுள்ளார்கள். போரின் பின் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறியுள்ள சிறார்கள் இதன் மூலம் நன்மை அடைந்துள்ளார்கள். ''நெஞ்சுறுத்தும் கானல்'' நாடகத்தால் மிதிவெடிகள், வெடிபொருட்களால் ஏற்படும் பாதிப்பு குறைந்துள்ளது எனலாம்.


நவீன நாடக உத்திகளையும். இசைப் பாடல்களையும், புதிய கல்விச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பங்கு பற்றலூடான செயற்பாட்டையும் இந் நாடக ஆற்றுகை உள்ளடக்கியுள்ளது.

'நெஞ்சுறுத்தும்கானல்' நாடகத்தை நெறியாள்கை செய் திருப்பவர் தே.தேவானந். இசையமைத்திருப்பவர் த.றொபேட், கவிஞர் இ.முருகையன் இதற்கான பாடல்களை எழுதியுள்ளார்.

### திறனாய்வுக் களம்

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சர்வதேச நிறுவனங்களைச் சார்ந்த பலரும் இந்நாடகத்தைப் பார்த்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். ஐரோப்பிய யூனியனைச் சார்ந்த அனா ஒலி ரொக்ஸ், பிரான்ஸ் உயர்ஸ் தானிகர் ஆலய கலாசாரப் பிரிவு இயக்குநர் ஜீன் போல்பவுரே, பி.பி.சி உலக சேவை கொழும்புப் பிரதிநிதி பிரான்ஸிஸ் கர்சன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

பி.பி.சி நிறுவனம் இலங்கையில் மிதிவெடிகள்தொடர்பான ஆவணத் திரைப்படம் ஒன்றை அண்மையில் தயாரித்திருந்தது. அத்திரைப்படத்தில் ''நெஞ்சுறுத்தும் கானல்''



நாடகத்தில் ஓர் காட்சி

### ஆட்டக்காரன்

நாடகமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்தோடு அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் சாமி பவல் என்பவரும் இந் நாடகத்தைத் தனது யாழ்ப்பாணம் தொடர்பான ஆவணப்படத்திற்காக எடுத்துச் சென்றுள்ளார்.

யதார்த்தத்தை அழகுணர்வோடு தெளிவாக மாணவர் மனதில் பதியக்கூடியதாகத் தகுந்த நேரத்தில் தயாரித்து மேடையேற்றுவது இந் நாடகத்தின் வெற்றிக்கு அடிப்படையென இந்நாடகத்தைப் பார்த்த பல அதிபர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அண்மைக்கால நாடக வரலாற்றில் அதிக தடவை மேடையேற்றப்பட்டதும் அதிக பார்வையாளர் பார்த்ததுமான நாடகமாக ''நெஞ்சுறுத்தும் கானல்'' நாடகத்தைக் குறிப்பிடலாம்.

# அமெரிக்க தாக்குதலை முறியடிக்க ஈராக் படைகள் தயார் நிலையில்

(பக்தாத்)

ஈராக்கின் மீது எந்தவொரு தீவிரவாத இயக்கமாயினும் தாக்குதல் தொடுத்தல் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்படுவார்கள் என ஈராக் எச்சரித்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் ஜனாதிபதிசதாம் ஹுசைனை பதவி கவிழ்க்குப்நோக்குடன் அமெரிக்கா தாக்குதல் நடத்த முற்பட்டால், அதனை முறியடிக்கும் நோக்குடன்எந்நேரமும்தமது படைகளை உசார் நிலையில் வைத்திருக்க ஈராக் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஈராக்கின் தனித்துவம், இறைமை ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகநடவடிக்கைகளை எடுப்பதில்ஈராக் பாராளுமன்றத்தில் எவ்வித கருத்து முரண்பாடுகளும் ஏற்படுவதில்லையெனஅந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக்கின் மீது எந்நேரமும் தாக்குதல் நடத்த தயாராகவுள்ளன இதனை முறியடிப்பதற்கு ஈராக் எந்நேரமும் தயாராகவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஜி-20 நாடுகள் கூட்டம் நேற்று டில்லியில் ஆரம்பம்

(புதுடில்லி)

ஜி-20வளரும் நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டம் நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது.

இரண்டுநாட்கள் நடைபெறும் இந்தக்கூட்டத்தில் ஏனைய விவகாரங்களுடன் தீவிரவாதத்திற்கு நிதிஉதவி அளிப்பதை எதிர்ப்பது ஆகிய திட்டங்களும் விவாதிக்கப்படுகின்றன.

இவ் ஆண்டுஇறுதியில் புதுடில்லியில் முதன்முதலாக நடைபெறவுள்ள ஜி-20 அமைச்சர்கள் கூட்டத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

1999ம்ஆண்டு அமைக்கப்பட்ட ஜி-20வளர்ந்துவரும் மற்றும் வளர்ந்தநாடுகளையும் ஐரோப்பிய யூனியன் சர்வதேச செலாவணி நிலையம் மற்றும் உலகவங்கிஆகியவற்றையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஷ)

# பலஸ்தீன ஜனாதிபதியாக அரபாத் நியமிப்பது குறித்து அமெ. ஆராய்வு

(வாஷிங்டன்)

பலஸ்தீனத்தில் புதிய தலைமை ஒன்று உருவாவதை அமெரிக்கா விரும்புவதாக வெளியுறவு அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

புதிய தலைமை ஒன்று உருவாக்கப்படுமானால், தற்போது பலஸ் தீனத்தின் தலைவராக விளங்கும்யசீர்அரபாத்துக்கு முக்கிய பதவி வழங்குவது குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யசீர் அரபாத்தைஜனாதிபதியாக பதவி உயர்த்தி விட்டு, பலஸ்தீனர்களுக்கென பிரதமர் ஒருவரை புதிதாக நியமிக்க வழிவகுத்துக் கொள்ள வேண்டும் என பல்வேறுதரப்புக்களிலிருந்தும் தெரிவிக்கப்படும் கருத்துக்களை கொலின் ஏற்றுக் கொண்டுள்ளார்.

பலஸ்தீனம் தொடர்பான எதிர்கால பேச்சுவார்த்தைகளின் போது அரபாத்துக்கு இடம் கொடுக்கப் போவதில்லையென்பதில்அமெரிக்கா உறுதியாக இருப்பதாகவும் பவல் வலியுறுத்தியுள்ளார்.

பலஸ்தீனசமாதானப்பேச்சுவார்த்தைகளிலிருந்து அரபாத்தைஒதுக்கிவிடுவதுபெரிய தவறாகும் என எகிப்திய ஜனாதிபதி முபாரக் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# அனைத்துக் கட்சிமாநாடு அரசு விரைவில் நடத்தும்

(கொழும்பு)

தற்போதைய நிலைபற்றி ஆராயும் சர்வகட்சி மாநாட்டை விரைவில் கூட்டுவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது.

அரசில் அங்கம்வகிக்கின்ற மற்றும் அங்கம் வகிக்காத பதியப்பட்ட அனைத்துக் கட்சிகளையும் கூட்டி தற்போதைய நிலை, மற்றும் தேர்தல் முறை மாற்றம், அரசு- புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியன குறித்து ஆராய்வதே இச் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதன் நோக்கமாகவுள்ளது.

பிரதமர் ரணிலின் அமெரிக்கப் பயணம் முடிவுற்றதும் பெரும்பாலும் இம் மாநாடு இடம்பெறலாம் என நம்பப்படுகிறது. (உ)

# ஜம்மு கொலைகளை கண்டித்து சர்வதேச சமூகம் அறிக்கை

(புதுடில்லி)

ஜம்மு அருகே காசிம் புறநகரில் கடந்த சனிக்கிழமை நடந்தபயங்கரவாதக்கொலைகளைக் கண்டித்து ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், யப்பான் மற்றும் ஐரோப்பியயூனியன் ஆகிய நாடுகள் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் இந்தக் கொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகள் அப்பாவி மக்களைக்கொன்று வகுப்பு வெறுப்புணர்வைக் கட்டவிழ்த்து விடும் முயற்சிகள் குறித்துக்கவனமாக இருக்குமாறு இந்திய துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி மக்களை எச்சரித்துள்ளார்.

பயங்கரவாதிகள் தமது எண்ணத்தை நிறைவேற்ற மேற்கொண்ட முயற்சி இது என்று அவர்கூட்டமொன்றில் தெரிவித்தார்.

இப் பயங்கரவாதத் தாக்குதல் குறித்து அரசின் எண்ணத்தை கோடிட்டுக் காட்ட அவர் நேற்று அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சி நாகரிக உலகம் முழுவதையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்றும் இதைக் கண்டிக்க வார்த்தைகளே இல்லைஎன்றும்மாநிலங்கள் அவைத்தலைவர்கிருஷ்ண

# குடியரசு தேர்தல் முடிவு நாளை அறிவிக்கப்படும்

(புதுடில்லி)

இந்திய குடியரசுத் தேர்தல் வாக்குப் பதிவுகள் புதுடில்லியிலும்ஏனையமாநிலதலைநகரங்களிலும் நேற்றுமுன்தினம் மாலை முடிவடைந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

4 ஆயிரத்து 896 நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தார்கள்.

புதுடில்லியில் 5 எம். எல். ஏ. கள் உட்பட 788எம்.பிக்கள் வாக்களிக்கும் தகு பெற்றிருந்தார்கள். ஆனால்13எம். பிக்கள் வாக்களிக்கவில்லை. 26 எம். பிக்கள் மாநிலதலைநகரங்களில் வாக்களித்தார்கள்.

மொத்தம் 90 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளன.

மாநில தலை நகரங்களில் இருந்து வாக்குப்பெட்டிகள் இன்றுபுதுடில்லிவந்துசேர்ந்துவிடும் என்றுதேர்தல்அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாளை காலை 11. 00 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு மாலைக்குள் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. (ஷ)

# சமாதான முயற்சிகள்குறித்து மக்களிடையே இன்னும் விளக்கம் ஏற்படவில்லை

## அமைச்சர் கொடித்துவக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச்செல்லப்படும் சமாதான முயற்சிகள்குறித்து நாட்டு மக்களிடையே இன்னமும் போதிய விளக்கம் ஏற்படவில்லை எனகல்விஅமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நூலகதிறப்புவிழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிராந்தியமட்டத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாகஅரசியலில்இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுள்ளது இவ்வரசியல்மாற்றங்கள் இலங்கையைபெரிதும் பாதித்துள்ளன.

எனவேஇதுகுறித்து மக்களுக்கு முதலில் விளக்கமளிக்க வேண்டும்எனவும் அவர் அங்கு தெரிவித்தார். (ஷ-8)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் இம் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (உ-3)

# 26 படைமுகாம்களை அகற்றக் கோரிக்கை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் 26 படைமுகாம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டிய தேவை இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வணக்கஸ்தலங்களில் அமைந்துள்ள 2 படைமுகாம்களும் தனியார் வீடுகளில் அமைந்துள்ள 10 படைமுகாம்களும் வைத்திய சாலைகளில்

# வீரமக்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

றிருந்தார்கள். ஆனால்13எம்.

அறிவிக்கப்படவுள்ளன.(ஷ)

# காதலியின் கைவிரலை துண்டாடிய காதலன்

(கொங்கொங்)

காதலியின் கைவிரலைக் கடித்து துண்டாக்கிய காதலனுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கொங்கொங்கில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவருக்கு கொங்கொங் நீதிமன்று 29 மாத சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

கொங்கொங் பிரபல வர்த்தகரின் சமையல் காரரான மேற்படிநபர் தாய்லாந்தைச் சேர்ந்ததன் காதலி, தன்னை விட்டுப்பிரிவதை தாங்க முடியாமலே இவ்வாறுகைவிரலைக் கடித்துத் துண்டாக்கியதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி பெண்ணின் துண்டிக்கப்பட்ட 1.5 சென்ரி மீற்றர் நீளமான கைவிரலை பொருத்தும் வைத்தியர்களின் முயற்சி கைகூடவில்லை எனத் தெரியவந்துள்ளது.

(உ-8)

## இந்தியா - பாகிஸ்தான் நாடுகளை அமைதியை கடைப்பிடிக்க அனான் கோரிக்கை

(இலண்டன்)

இந்தியாவும், பாகிஸ்தானும் மீண்டும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் கோரிக்கை விடுத்துள்ளார்.

காஷ்மீர் தென்பகுதியில் உள்ள குடிசைப் பகுதியில் கடந்த சனிக்கிழமைநள்ளிரவு 28 சேரி வாசிகள் கொல்லப்பட்டதையடுத்தே அவர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இவ்விருநாடுகளுக்குமிடையேயுள்ள பதற்றத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடனேயே இந்ததாக்குதல் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது என தெளிவாக தெரிகிறதுஎனவும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

களே இல்லையென்றும்மாநிலங்கள் அவைத்தலைவர்கிருஷ்ணகாந் கூறியுள்ளார்.

அனைத்துக் கட்சிகளும் இத்தாக்குதல் மிகக் கொடூரமானது என்று கண்டித்துள்ளன.

(ஷ)

---

## நயினாதீவில் புலிகளின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளியின் பின்னர் நயினாதீவு மணிமேகலை கலையரங்கில் மாபெரும் பொதுக் கூட்டம் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த ரதன் தலைமையில் நடை பெற்றது.

இக் கூட்டத்தில் நயினாதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந.விசுவநாதன், தீவக கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர்சி.செம்மணன் யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவு பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் உரையாற்றினார்கள்.

இறுதியில் தமிழீழ இசைக் குழுவின் இசை நிகழ்வும் இடம் பெற்றது. (ஷ)

களும் வைத்திய சாலைகளில் அமைந்துள்ள 2 படைமுகாம்களும் வேறு பொதுக் கட்டடங்களில் அமைந்துள்ள 12 படைமுகாம்களுமே உடனடியாக அகற்றப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

(உ)

## குடும்பப்பதிவு செய்யுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பலாலியிலிருந்து இடம் பெயர்ந்து வேறிடங்களில் வசித்து வரும் அனைவரையும் நாளை காலை 8.00 மணிக்கு ஆவரங்கால் சிவன் கோயில் முன்பாக குடும்ப அட்டைகளுடன் வந்து பதிவு செய்யுமாறு பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சீ.சி.கந்தையா கேட்டுள்ளார்.

பலாலி இராணுவத்தலைமைப்பீடத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையின் கீழ் பதிவு செய்யும் படிவங்கள் நாளை மாலை 4.00மணிக்கு உரிய இடத்தில் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஷ)

(யாழ்ப்பாணம்)

ஈழப்போரில் இதுவரை உயிர்நீத்த உத்தமர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வீர மக்கள் தின இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றன.

இந்தவகையில், நேற்றைய தினம் அமரர் செல்வநாயகத்தின் தூபி மற்றும் கொக்குவிலில் அமைந்துள்ள நினைவுத்தூபி ஆகியவற்றில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

(உ-19)

## முக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராமசேவையாளர்கள், சமுர்த்திஉத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோருடனான முக்கிய சந்திப்பு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகளின் வலிகாமம் கிழக்கு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (உ-3)

உறின் நட்டு அறின் ஒருஉம் ஒப்பிலார் கேண்மை பெறினும் இழப்பினும் என்.

குறள்

வலம்புரி

## முற்றுப் பெறாத முடிவுகள்

ஐ.தே. முன்னணி அரசு பதவியேற்ற கையோடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடும் என பலரும் எதிர்பார்த்ததுண்டு. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக அரசின் சமாதான முயற்சிகள் ஏமாற்றத்தையே தந்தவண்ணமுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தியது உண்மையெனினும் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்களே யுத்தத்தை மீண்டும் ஏற்படுத்திவிடும் போல் தெரிகிறது.

அரசும், விடுதலைப்புலிகளும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டை முன்வைக்கும் காலப் பகுதியாகவே தற்போது யுத்த நிறுத்த காலம் அமைந்துள்ளது. இவ்வாறு ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவை ஒரு கட்டத்தில் திரண்டு வரும்போது, நிலைமை யுத்தமாகவே அமையும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை.

இத்தகைய நிலைமை நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவோ அல்லது அரசும் விடுதலைப் புலிகளும் சமாதான மேசைக்குச் செல்லவோ வழி வகுக்காது.

மாறாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் குழுவினர் இருதரப்பு முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதும் சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைப்பதும் நடைபெறுமேயொழிய அவற்றின் முடிவுகள் முற்றுப் பெறாதவையாகவே இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் வேலணையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு புலி உறுப்பினர்கள் தாக்கப்பட்டமைக்குப் போதிய ஆதாரங்கள் இல்லையெனக் கூறி தமது விசாரணை அறிக்கையை முடிவுறுத்தியுள்ளது.

மறுபுறத்தில் சுயாதீன ஆணைக்குழு இப்போதுதான் வேலணைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளையே ஆரம்பித்துள்ளது.

ஒரு விசாரணை ஆதாரம் இல்லையென்று கூற இன்னொரு குழு விசாரணையை ஆரம்பித்துள்ளதெனில் இவ்வாறே ஒவ்வொரு விசாரணைகளும் முற்றுப்பெறாத முடிவுகளாக அமைவது திண்ணம்.

# தேவர்களின் இரவாகிய தெட்சணாயனத்தின் ஆரம்பமாம் ஆடிப்பிறப்பைப் போற்றுவோம்

**கு. தியாகராச சர்மா**

பூமி சூரியனைச் சுற்றி வர எடுக்கும் 365 நாட்கள் பன்னிரு மாதங்கள் கொண்ட ஒருவருடமாகவும், இந்த ஒரு வருடத்தின் முதல் ஆறு மாதங்கள் தை முதல் ஆனி வரை உத்தராயணம் எனவும் ஆடிமுதல் மார்கழி வரை தெட்சணாயனமாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

பருவகாலங்கள்

பன்னிரு மாதங்களில் சித்திரை, வைகாசி இளவேனில் எனவும், ஆனி, ஆடி முதுவேனில் எனவும், ஆவணி, புரட்டாதி கார்காலம் எனவும், ஐப்பசி, கார்த்திகை கூதிர்காலம் எனவும், மார்கழி, தை முன் பனிக்காலம் எனவும், மாசி, பங்குனி பின் பனிக்காலம் எனவும் எம் நாட்டின் பருவநிலைக்கேற்ப காலங்கள் நம் முன்னோராற் பகுக்கப்பட்டுள்ளன.

இந்த விதத்திலே இயற்கையோடொத்த சமயவழிபாடுகளும், கொண்டாட்டங்களும் கூட பண்டைத் தமிழ் மக்களால் வகுக்கப்பட்டும், சிறப்பிக்கப்பட்டும் வருகின்றன. இவ்விதமாகவே உத்தராயண ஆரம்பகாலமான தை மாதத்தில் பொங்கல் விழா, உழவர் விழாவென உழவுத்தொழிலின் அறுவடைப் பலனைப் போற்றி நன்றி விழா எடுக்கின்றார்கள்.

ஆடிச்சிறப்புக்கள்

இதேபோன்று தெட்சணாயண ஆரம்பமாகிய ஆடி மாதத்தில் ஆடி விதை தேடி விதைத்தும், உழுதொழிலை ஆரம்பித்தும் ஆடிப்பிறப்பெனவும், ஆடிப்பெருக்கு எனவும் ஆடி மாதத்தினைப் பெரிதாகப் போற்றிக் கொண்டாடுகிறார்கள். இந்த ஆடி மாதச் சிறப்புக்களைப் பார்க்குமிடத்து, ஆடி முதலாம் நாள் ஆடிப்பிறப்பு என பெரியோர், சிறியோர் யாவரும் குதூகலமாகக் கொண்டாடுவதையும், ஆடிச் செவ்வாய் தோறும் ஆலய வழிபாடுகள் செய்வதையும், ஆடிப் பூரத்தினத்திலே உலக மாதாவாகிய அன்னையைப் போற்றி வழிபடுவதையும், ஆடி அமாவாசை நாளிலே நம் முன்னோருக்கு பிதிர்த் தர்ப்பண ,தானதர்ம வழிபாடுகள் செய்வதையும், ஆடிமாதக் கடைசி வெள்ளி நாளிலே வரம் யாவும் தரும் வரலட்சுமியை வழிபடுவதையும் பல்லாண்டுகளாகவே எம் தமிழ் மக்கள் சைவத் தமிழ்ப் பண்பாட்டுடன் சிறப்பித்து வருகின்றனர்.

பீடை மாதம்

சில காலத்தின் முன்னர், விடுமுறையாக ஆடிப்பிறப்பு இருந்த காலத்தில் பள்ளிச் சிறுவர்கள் எல்லோரும் 'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை, ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' எனக் குதூகலிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஈழத்து நவாலியூரிற் பிறந்தவரும், தமிழ்ப் பெரும் புலவரும், தமிழ்ச் சிறார்களாற் தங்கத் தாத்தா எனப் போற்றப்படுபவருமான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் ஆடிப் பிறப்புப் பற்றிப் பாடிய பாடலை அதன் இனிமையைச், சுவையின் தனிச் சிறப்பைச் சிறுவர்முதற் பெரியோர் வரை பாடி ஆடி மகிழ்வதைப் பார்க்கும்போது, மிகவும் பரவசமாயிருக்கும். சிறப்பிற்குரிய ஆடிப்பிறப்பு நன்நாளை நாமும் கொண்டாடி இன்புற்று மகிழ்வோமாக. இந்த ஆடிமாதம் இறைவழிபாடு, தொழில் (ஏர்த்தொழில்) மேம்பாடு, பிதிர் வழிபாடு, சக்தி வழிபாடு எனப் பல மேன்மைகளையும் கொண்டிருப்பதனால் நம் முன்னோர் ஆடி பீட மாதம் என மாதங்களில் மேற்பீடத்தமர்த்திப் போற்றினார்கள். இதனைச் சிலர் ஆடி பீடை பிடித்த மாதம் எனத் தவறான கருத்துக் கொண்டு விலக்கிவிடுகின்றனர்.

ஆடி மாதம் பல்லாற்றானும் சிறந்ததும் உயர்ந்ததும், மாதங்களிலெல்லாம் பீடத்திருப்பதும் என்பதை ஆடி மாதச் சிறப்பும், பெருமையும் நன்குணர்த்துவதாயுள்ளது. இதனை நன்குணர்ந்து ஆடிப் பிறப்பைக் கொண்டாடுவோமாக. ●

# வட-கிழக்கில் இயல்பு நிலை திரும்பாதவரை அரசு-புலிகள் நேரடிப் பேச்சு சாத்தியமில்லை

## செய்தியாளர் மாநாட்டில் விநாயகமூர்த்தி எம். பி.

(திருநெல்வேலி)

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இயல்பு நிலை உருவாகாத வரையில் அரசு-புலிகள் நேரடிச் சமாதானப் பேச்சுவார்த்தை காலம் கடந்து கொண்டே செல்லும்.

இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

நேற்றைய தினம் கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

இலங்கையின் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இயல்பு நிலையும் சமாதானமும் ஏற்பட்டுள்ளது, ஆனால் வடக்கு-கிழக்கைப் பொறுத்த வரையில் இயல்பு நிலை தோன்றவில்லை.

மீன் பிடிக் கட்டுப்பாடுகள் மீள் குடியமர்வு தடை மற்றும் படையினரின் அடாவடித்தனங்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

அத்துடன் புதிது புதிதாக உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் எப்போது? யாரால்? பிரகடனம் செய்யப்பட்டது. இதற்கு பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டதா? என்பது புதிராகவே உள்ளது.

சமாதானத்தை நிலை நாட்ட அரசு விரும்பினால் வடக்கு – கிழக்கில் இயல்பு நிலையை உடனடியாக ஏற்படுத்தி தமிழ் மக்களின் ஏகப் பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

இம் மாநாட்டில் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வி.கே. சிவஞானம், கட்சி உறுப்பினர் மகேந்திரராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(த-43)

# அரசியல் ரீதியான தீர்வே யுத்தத்திற்கு முடிவு

## ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

பேச்சுவார்த்தை ஊடாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதன் மூலமே யுத்தத்திற்கு நிரந்தரமாக முடிவு கட்ட முடியுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாப்பகூவ பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்குமேலும் பேசுகையில்,

தற்போது அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தை, நிரந்தர யுத்தநிறுத்தமாக்குவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும். இதனை அடைந்து கொள்ளும் பொருட்டு விடுதலைப் புலிகளின் அப் பணிப்பினை அரசு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அதேவேளை சமாதானத் தீர்வை எட்டும் வகையில் இனங்களுக்கிடையே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டுதேசியமட்டத்திலான கலந்துரையாடல்களை காலம் தாழ்த்தாது ஆரம்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

(த)

### தினசரி தியானம்

### மழை

வானமாய் நின்று இன்ப மழையாய் இறங்கி
எனை வாழ்விப்பது உன்பரங்காண்.

- தாயுமானவர்

நீ கருணாகரன், மழை நீர் போன்று உன் கருணை எல்லார்க்கும் சொந்தம்.

வானத்தினின்று தூயதாக மழை நீர் கீழே இறங்குகின்றது; பூமியில் உள்ள இடத்தின் குணதோஷம் பாராது அது எங்கும் சமமாக வீழ்கிறது. அதனதன் பாங்குக்கு ஏற்ப ஒவ்வோர் இடமும் மழை நீரைப் பயன்படுத்துகிறது. அதைப் பயன்படுத்தாது விட்டுவிடுகிற இடமும் உண்டு; ஈசுவரகிருபை எல்லார்க்கும் சொந்தம். அதைநன்கு பயன்படுத்தத்தெரிந்துகொள்ள வேண்டும்.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

வெண்புறா செயற்கைக்கால்

# தயாரிப்பாளர்களுக்கு ஜி. ரி. சற் மேலதிக பயிற்சி

வெண்புறாசெயற்கைக்கால் தயாரிப்பாளர்களுக்கான இருவார பயிற்சி நெறி ஒன்றினை ஜேர்மன் தொழில் நுட்ப வியலாளர்கள் வழங்கியுள்ளனர்.

நவீன முறை மூலம் செயற்கைக் கால்களைத் தயாரிப்பது தொடர்பாகவே இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 5 இலட்சம் ரூபா பெறுமதியான செயற்கைக்கால் உற்பத்திக்கான உபகரணங்களை வெண்புறா நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

இந் நிறுவனமானது 1994 முதல் இவ்வாண்டு யூன் மாதம் வரை, ஆயிரத்து 150 பேருக்கு செயற்கைக்கால்களை வழங்கியுள்ளதுடன் 98 சக்கர நாற்காலிகளையும் 282 ஊன்று கோல்களையும் 26 முச்சக்கரவண்டிகளையும் 105பாதணிகளையும் வழங்கியுள்ளது.

(உ)



மாவீரன் லெப்.கேணல் சீலனின் 19வது ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த 15ம் திகதி வன்னியில் நடைபெற்றபோது நிகழ்வரங்கிற்கு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுத் தளபதி லெப்.கேணல் வீரமணி அழைத்து வரப்படுவதையும், தளபதி கேணல் பால்ராஜ் முதன்மைச்சுடரை ஏற்றிவைப்பதையும், பெண்போராளிகள் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# வேலணைத் தாக்குதல் சம்பவம் விசாரணை நேற்று ஆரம்பம்

## கடற்படை அதிகாரி வாக்குமூலம் அளித்தார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் வேலணையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழுவின் முதற்கட்ட விசாரணைகள் நேற்று யாழ் அரச செயலகத்தில் ஆரம்பமானது.

முற்பகல் 10 மணி தொடக்கம் பி.பகல் 3 மணிவரை இடம்பெற்ற விசாரணைகளில் படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் வாக்குமூலம் அளித்தனர்.

சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் எயார்வைஸ் மார்ஷல் கரிகுணதிலக, ஆணைக்குழு உறுப்பினர் ஏ.பி வீரசிங்க விடுதலைப்புலிகளால் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் விசாரணைகளை நடத்தினர்.

விசாரணையின் போது வடபிராந்திய கடற்படை அதிகாரி சரத்வீரசேகர ஒன்றரை மணித்தியாலங்கள் தனது வாக்குமூலத்தை வழங்கினார்.

அதனை அடுத்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்தி கஜநாயக்க தனது வாக்குமூலத்தை வழங்கினார்.

எனினும் பொதுமக்கள் தரப்பில் இருந்து எவரும் வாக்குமூலம் அளிக்கவில்லை.

இதேவேளை விசாரணைகள் குறித்து ஆணைக்குழு அதிகாரி ஹரிகுணதிலக பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கையில்:-

தீவகத் தாக்குதல் சம்பவம் தொடர்பான தகவல்களை கடற்படையினரிடம் இருந்து பெற்றுள்ளோம்.

இச்சம்பவம் குறித்து பொதுமக்கள் வாக்குமூலம் அளிக்க இது ஓர் அரிய சந்தர்ப்பம். இதில் யாருக்கும் பயமில்லாமல் அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று கருத்துச் சொல்லாமல் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் நடந்த விபரத்தைப் பொதுமக்கள் தெரிவிக்க முடியும்

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் படங்களுடன் வருவதும் மிகவும் நல்லது எனவும் கூறினார்.

இதேவேளை இன்றும் இவ்வாணைக்குழுவினரின் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

இன்றைய விசாரணையில் விடுதலைப்புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன், துணைப் பொறுப்பாளர் தயாளன் ஆகியோர் தமது வாக்குமூலத்தை வழங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-6-43)

## ''66'' ஆயிரம் லீற்றர் பெற்றோல் யாழ் .எடுத்துவரப்படும

(வவுனியா)

ஏ. எம். ரீ. ராண்ஸ்போட் நிறுவனத்தினால் ஏ-9 வீதியூடாக 66 ஆயிரம் லீற்றர் பெற்றோல் இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுகிறது.

தரைப்பாதை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் எடுத்துவரப்படுவது இதுவே முதற் தடவையாகும். (இ)

### தீவகத்தில்...

சந்தி ஆகிய இடங்களில் திரண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், தனியார் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் படையினரின் போக்குவரத்துக்களை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் வீதி மறிப்புப் போரில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தினால் பாடசாலைகள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது. அத்துடன் போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிற்பகல் 2மணியளவில் வேலணை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குச் சென்று அங்கு மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இதேவேளை வேலணை பாடசாலை வீதி இன்று முதல் பொதுமக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுமென்று வேலணை பொதுசனத் தொடர்பு அதிகாரி ரொனிப் பெரேரா அறிவித்துள்ளார்.

காரைநகர் கடற்படைத் தளபதியின் உத்தரவுக்கு அமைவாக ரொனிப் பெரேரா மேற்படி போக்குவரத்து அனுமதியை வேலணை உதவி அரசாங்க அதிபர் எஸ். இரத்தினம் மூலம் தீவக நலன் காப்பகத்திற்கு அறிவித்துள்ளார். (இ-75-43-249)

### புலிகளின்...

தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார்.

அப்பேட்டியல் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இரணைதீவுக் கடற்பரப்பில் இரு படகுகளை கடற்படை சோதனை இட முற்பட்டதாகவும் அதில் ஒரு படகு தப்பிச் சென்று விட்டதாகவும் மற்றைய படகைச் சோதனையிட்ட போது அது இந்தியாவில்பதிவு செயயப்பட்டதாக இருக்கக்காணப்பட்டது.

அப்படகைக் கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் கரைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது விடுதலைப்புலிகள் அதற்கு மாறாகச் செயற்பட்டுள்ளனர் என்றும் கடற்படை ஒருபோதும் யுத்தநிறுத்தத்தை மீறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

### எனக்கு...

தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் யூன் மாதம் 26ந் திகதி அனுமதிக்கப்பட்ட கடிதம் தனக்கு இம்மாதம் 12ந் திகதி கிடைத்தது என்றும் பௌஸி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தனக்கு அனுப்பி வைத்த கடிதம் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் காணப்படுவதாகவும் இத்தகைய கடிதம் ஒன்றில் கட்சியின் செயலாளர் நாயகமே கையொப்பமிடவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியால் தனக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் எதுவும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை எனக் கூறிய பௌஸி தேசிய அரசாங்கம் ஒன்று இருக்கக் கூடாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எப்போதாவது தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளதா என்றும் ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

இத்தகைய தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு இருப்பின் அதனைத் தனக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

தன்மீது ஜனாதிபதி தனிப்பட்ட பகைமை உணர்வை கொண்டுள்ளதால் கட்சியாப்பின் 14.18ம் பிரிவின் கீழ் அவர் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்றும் கூறியுள்ளார். (ந-5)

### பாதுகாப்பு...

முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்து நேரடியாக ஆராயும் பொருட்டே அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

## வடபகுதிக்கான விஜயம்

# வெளிநாட்டு பிரஜைகளுக்கான பாஸ்நடைமுறை நீக்கம்

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜைகள் நாட்டின் வடபகுதிக்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த பாஸ் அனுமதிப் பத்திர நடைமுறைகள் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறித்துள்ளது.

வடபகுதிக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்றும் இந் நடைமுறை உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பிரஜைகள் வடபகுதிக்குச்செல்வதற்கான பாஸ் அனுமதிப்பத்திர நடைமுறைகள் நீக்கப்பட்டு நீண்டகாலத்தின் பின்னரே வெளிநாட்டு பிரஜைகளுக்கான அனுமதிப்பத்திர நடைமுறை நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

நடன முருகன் வைத்திய நிலையம்
சத்திரச் சந்தி யாழ்ப்பாணம்
பார்வையிடும் நேரம்
காலை 9.00 மணி – 2.00 மணி வரை
மாலை 3.30 மணி – 7.00 மணி வரை
ஞாயிறு மாலை திறக்கப்படமாட்டாது.
[5683]




### கண்காணிப்புகுழு...

சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்

இச்சந்திப்பிற்கு முன்னதாக இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் வந்திறங்கிய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரை புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் வரவேற்று கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு இருதரப்பினரும் மனம் விட்டுப் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இப்பேச்சுக்களின் கருப்பொருளாக கடந்த 14ந் திகதி ஞாயிற்றுக் கிழமை விடுதலைப்புலிகள் விடுத்திருந்த அறிக்கை அமைந்திருந்தது.

அந்த அறிக்கை தொடர்பான கலந்துரையாடலின் பின் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல் போக்குவரத்துத் தொடர்பாக பல தடவைகள் கலந்துரையாடப்பட்ட போதும் இறுதியான முடிவு எடுக்கப்படாதமை கவலைக்குரியது.

#### புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தவிர்க்கப்பட வேண்டும்

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரிவு 1.3 இன் பிரகாரம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடற்பரப்பில் நடமாடுவது தொடர்பாக எதுவித தடைகளும் விதந்துரைக்கப்படாத வகையிலும், இலங்கைக் கடற்படையினர் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எந்தவித தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என வலியுறுத்தப்பட்டிருப்பதினாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் சுதந்தரமாக தமது கடற்பரப்பில் நடமாடும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் கைச்சாத்திட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை, மீறல்கள் எதுவும் இன்றி நடைமுறைப்படுத்தப்படும் போது சிறிலங்கா கடற்படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பிரதேசத்தில் தேவையற்ற வகையில் நுழைந்து அங்கு நடமாடும் படகுகள் புலிகளின் படகுகள் என்பது நன்கு தெரிந்த பின்னரும் அவற்றைத் தடுத்து நிறுத்திச் சோதனையிட்டு புலிகளை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று பல தடவைகள் வலியுறுத்தப்பட்டது.

தேவையற்ற மோதலைத் தவிர்ப்பதற்காக சிறிலங்கா கடற்படை வடக்குக்கிழக்கில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடற்பிரதேசத்தில் தரையில் இருந்து 10 கடல் மைல் தொலைவிற்கு அப்பால் தங்கள் போக்குவரத்துக்களை மேற்கொள்ளுவதன் மூலம் மோதல்களைத் தவிர்க்க உதவும் எனவும் பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதும் இந்த எல்லைக் கட்டுப்பாட்டில் கடற்படையினர் போகாமல் எமது கடற்பரப்பினுள் நுழைந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

#### யுத்த நிறுத்த உடன்படிக்கை இருபடைகளையும்வலியுறுத்தியுள்ளது

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் ஒப்பமிட்ட வகையில், சிறிலங்காவில் இரண்டு படைகள் உள்ளன என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு தரப்பும் மோதல்களைத் தவிர்த்து நம்பிக்கையை கட்டியெழுப்பி நிலையான சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் எட்ட வேண்டும் என்பது தெளிவு.

இந்த வகையில் ஒப்பந்த விதிகளை எந்தவிதத்திலும் மீறாமல் விடுதலைப்புலிகள் தங்களைத் தெளிவாக அடையாளப்படுத்தியவாறு கடற்பரப்பில் சுதந்திரமாக நடமாடுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர். இப்பின்னணியில் கடந்த 13ம் திகதி சனிக்கிழமை இரணைதீவுக் கடற்பகுதியில் மோதலை உருவாக்கக் கூடிய சம்பவம் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். இதில் கண்காணிப்புக் குழுவினர் கடற்படையினரால் திட்டமிட்ட வகையில் அழைக்கப்பட்டு கடற்படையினருடன் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டமையால், அவர்கள் துரதிஷ்ட வசமாக அசௌகரியங்களுக்கு உட்பட நேரிட்டது.

#### கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை பாதுகாக்கவே ஏற்றினர்

விடுதலைப்புலியின் கடற்புலி அணியினர் கண்காணிப்புக்குழு அங்கத்தவர்களின் பாதுகாப்புக்கருதியே தமது படகில் அவரகளை அழைத்துவர நேர்ந்தது. இதன் போது அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கும், மன உழைச்சலுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆழந்த வருத்தத்தைத் தெரிவிக்கும் அதேவேளை, தங்கள் நடவடிக்கை முற்றிலும் நல்லெண்ணத்தின் பாற்பட்டதே என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றனர். அந்தச் சந்தர்பத்தில் கண்காணிப்புக குழு அங்கத்தவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருந்தால் அதற்குரிய பொறுப்பினை சிறிலங்கா படையினர் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதே சுமத்தியிருப்பர். இத்தகைய மோசமான ஒரு நிலையைத் தவிர்ப்பதற்கு கடற்புலிகள் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களை தமது படகில் பாதுகாப்பாக ஏற்றிச் சென்றனர்.

#### யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுவை புலிகள் நம்புகின்றனர்

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மீதும், அதன் தலைவர் மீதும் விடுதலைப்புலிகளுக்கு உள்ள நம்பிக்கை இச்சம்பவத்தினால் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். அத்துடன் கடற்படையினரின் நடவடிக்கை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்குள்ள நியாயமான கரிசனைகளை கருத்தில் கொண்டு கண்காணிப்புக் குழு சிறிலங்கா அரசுடன் பேசி கடற்படையினரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்புகின்றோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

### விமானப்படைக்கு...

இராணுவ நடவடிக்கை, 1995ல் இடம்பெற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆகியவற்றின் போது திறமையாக செயற்பட்டமைக்காக இவருக்கு அரசு பதக்கங்கள் வழங்கி கௌரவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### ஓகஸ்ட் 2க்கு...

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

கைதிகளின் விடுதலை குறித்து விரிவாக ஆராயும் பொருட்டு ஒரு சில தினங்களில் சட்டமா அதிபர் தலைமையில் உயர் மட்ட மாநாடு ஒன்றை கூட்டுவதற்கும் இச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான வி.ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அமைச்சர்கள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (த)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.